# சிந்தனைச் சித்திரம்.

பகுத்தறிவுச் சிறு கதைகள்.

★

ப. கண்ணன்

★

தென்றல் நூற்பதிப்புக் கழகம்

சலகண்டபுரம் :: (சேலம் மாவட்டம்.)

# CHINTHANAI CHITHIRA

(ALL RIGHTS RESERVED.)

★

Published by :
THENRAL BOOKS PUBLISHING SOCIETY.

Printed at :
THE SENTHAMIZH PRINTING WORKS,
Jalakantapuram. - - Salem Dist.

★

விலை : 0—10—0

# பதிப்புரை.

"கலை யுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும், கண்மூடி வழக்கமெலாம் மண் மூடிப் போக," என்று பாடினார் இராமலிங்க சுவாமி கள். நாட்டு நிலையும், சமூகச் சீர்கேடும், துறவு வழிச் சென்ற அவரையே சிந்திக்கவைத்தன! சிந்தித்தார்: சினந்தார், வெடித்தன இந்த வேதனைச் சொற்கள்!

நாமும் சொல்கிறோம்; கடவுள், மதம், சாஸ்திரம், பழக்க வழக்கம், மூடநம்பிக்கை இன்ன பிறவற்றைக் காக்கவும், பரப்பவும், கலையின் பெயரால் நிலைப் படுத்தவும், அதனால் பிழைக்கவும் இடையறாது முய ன்றுவருகிறது ஒரு கூட்டம்! சிந்தனை என்றால் அவர் கள் சீறுவார்கள். பகுத்தறிவு என்றால் பதைப்பார் கள்! இவர்களால் நாடுபெற்ற கேடுகள் பல! அவற்றை விளக்கவும், சிந்திக்கத் தூண்டவும் எழுதப்பெற்றவை இச் சிறுகதைகள்.

ஈரோட்டினின்றும், பெரியார் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் நடத்திவந்த **பகுத்தறிவு** என்ற திங்கள் இதழில், 1935—36 ல், ஜே. பி. கிருஷ்ணன் என்ற பெய ரால், இன்றைய தோழர் ப. கண்ணன் எழுதிய சிறு கதைகள் சிலவற்றின் தொகுப்பு, இந்த "சிந்தனைச் சித்தி ரம்" அன்றைய சுயமரியாதை இயக்கத் தோழர்கள் பலர், இக்கதைகளை இன்றும் மறவாமலிருப்பதை யறிந்தபோது வியப்படைந்தோம்! இன்றைய தோழர் கட்கும், எதிர்கால இளைஞர்கட்கும், இவை பயன்படும் என்ற நம்பிக்கை முளைத்தது. எனவே மகிழ்வோடு புத்தகமாக்கினோம். ஏற்றருள்க.

சலகண்டபுரம், 11-10-50. } **தென்றல் நூற்பதிப்புக் கழகத்தார்.**

# அடக்கம்.


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அபிராமி | .... | .... | 5 — 19 |
| 2. | யோகி | .... | .... | 20 — 37 |
| 3. | நான்கு வருடங்களுக்கப்பால் | | .... | 38 — 54 |
| 4. | மந்திரக்காரி | .... | .... | 55 — 63 |
| 5. | வேசியின் மகள் | .... | .... | 64 — 80 |

# அபிராமி.

## 1

கோபாலன் ஒரு கௌரவமுள்ள வாலிபத்தொழிலாளி. நற்குண நற்செயல்களுக்கு இருப்பிடமானவன். சிறந்த அழகன், உடற்கட்டு வாய்ந்த வீரன். ஆனால் அவன் ஏழை! சேற்றில் மலர்ந்த செந்தாமரை! எனவே அவன் அழகும் திறமையும் குடத்திற்குள் வைத்த விளக்காயின

அரங்கனூரிலே செல்வந்தர்களில் முதற்புள்ளியாக ஜமீன்தார் விமலானந்தரைத்தான் சொல்ல வேண்டும். ஏராளமான சொத்து, மிகுந்த செல்வாக்கு. ஆனால் அபிராமியைத் தவிர அவருக்கு வேறு சந்ததியே கிடையாது. அது ஒரு பெரிய குறைதான். அதுதான் போகட்டுமென்றாலும், அபிராமியாவது சுமங்கிலியாக வாழலாகாதா? அவள் பச்சைக் குழந்தையிலேயே ஒரு செல்வந்தரின் மகனுக்கு "செல்லக் கலியாணம்" செய்விக்கப் பட்டுத் தாலியறுத்தவள்! பரிதாபத்துக்குரிய பால்ய விதவை!

விமலானந்தர் களங்கமற்ற குணமுடையவர், ஆனால் முன்கோபி. மதத்தில்-வைதிகத்தில்-மிகுந்த பற்று. பிடிவாதமுள்ள சுபாவம்! அபிராமி சிறுவயதிலேயே விதவையாகிவிட்டது, அவளது "முன் ஜென்மப் பலன்" என்பது அவரது நம்பிக்கை! இப்படிப் பட்டவரையுங்கூட நாகரிகம் விட்ட பாடில்லை. ஆம், அதுதானே காலத்தின் தன்மை!

ஜமீன்தார் விமலானந்தர், தன் பழைய வீட்டுக் கருகில் புதுமையான முறையிலே ஒரு பெரிய மாளி-

கை கட்டுகிறார். தாராளமான செலவு, எல்லாம் புத்தம் புதிய அமைப்புகள். நமது கோபாலன் மரச் சாமான்களுக்குச் சித்திர வேலைப்பாடுகள் செய்யும் பொருட்டு பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டான். அவன் தொழிலுக்கு ஒரு தனியிடம், தனிக் கௌரவம் கிடைத்தது.

## 2

அவனுக்கென்று அமைத்துள்ள அந்தக்கித்துக் கொட்டகையில், அவனது கவனம் முழுதும் கையில் பிடித்த உளியிலும், மரக்கட்டையிலும் பதிந்திருக்கும். அவனது கற்பனைக்கண்கள் திறந்திருக்கும். கரங்கள் புதிய புதிய சிற்பங்களையும், அற்புதமான வேலைப்பாடுகளையும் கலையழகோடு சிருஷ்டித்துக் கொண்டிருக்கும்.

அபிராமிக்குத் தன் அறையின் சாளரத்தின் வழியாகக் கோபாலனை நன்றாகப் பார்க்க முடியும். அவள் ஏதோ ஒரு சக்தியால் இழுக்கப்பட்டு தன்னை யறியாமல் அவனது பேரழகிலே லயித்துவிட்டாள்! அவள் "தான் ஒரு இளம் விதவை" என்பதையும் அன்னிய புருஷனைக் கண்ணெடுத்துப் பார்க்கலாகாதென்பதையும் மறந்தே விட்டாள்! என்ன செய்வாள்? அவள் மனம் அவனை வென்றுவிட்டது. கோபாலன் அவளை அடியோடு கொள்ளை கொண்டு விட்டான்.

பாவம்! அவன் எப்படி இதனை அறிவான்? இரண்டு சுடர் விழிகள் ஆர்வத்தோடு அன்றாடம் தன்னைப் பருகிவருவது, அந்த ஏழை வாலிபனுக்கு எப்படித் தெரியும்? கடமையே அவனுக்குப் பிரதானம்.

ஆம்! கடைசியாக அவன் உணர்ந்துவிட்டான். இருவர் கண்களும் நேரடியாகச் சந்தித்துவிட்டன! அந்த ஒரு வினாடியில் அவர்களது கண்கள் எவ்வளவோ செய்திகளைப் பரிமாறிக்கொண்டன! கோபாலனுக்குள் பெரிய மனமாற்றம்! புரட்சி! பலப்பல எண்ணினான், உணர்ச்சியால் உந்தப்பட்டான்!

அன்று அவனுக்கு வேலையே ஓடவில்லை. ஒரே குழப்பம்! எப்படியோ சமாளித்துக் கொண்டு வேலையைத் தொடங்கினான். மனதுக்கும் செய்யும் வேலைக்கும் சம்மந்தம் ஏற்படவில்லை. என்னென்னவோ கனவுகள்! கற்பனைக் கோட்டைகள்!

அந்தோ! அச்சமயத்தில் அவன் கையில் பிடித்த கூரான உளி அவனையறியாமல் அவனது உள்ளங்கையில் ஆழமாகப் பாய்ந்து விட்டது! இரத்தம் "குபு குபு" வென்று பொங்கி வழிந்தது! கோபாலன் சுயப்பிரக்ஞை இழந்துத்தரையில் சாய்ந்து விட்டான்!

அபிராமி இதைப்பார்த்தாள். அந்த உளி தன் மார்பில் பாய்ந்ததைப் போலிருந்தது அவளுக்கு! வேகமாக அறையினின்றும் ஓடி வந்தாள். வேறெதைப்பற்றியும் சிந்திக்கவில்லை. கோபாலனை எடுத்துத் தன் மார்பின்மீது சார்த்திக் கொண்டாள். வேண்டிய முதல் உதவியைப் பர பரப்போடு செய்தாள். ஆம்! அதை மறைக்க முடியாது. கோபாலனின் ஸ்பரிச உணர்ச்சி அவளை ஒரு புதுப்பெண்ணாகமாற்றிப் புத்துலகில் பூரிக்கவைத்தது. சிறிது நேரத்தில் கோபாலன் ஜமீன்தாரின் ஆட்களால் அவனது குடிசையில் கொண்டு சேர்க்கப் பட்டான். அபிராமியின் அன்பு பாராட்டப்பெற்றது.

கோபாலன் சுய உணர்வு பெறும் பொழுது, தனது குடிசையினுள் கட்டிலில் படுத்திருப்பதையும் தன் கிழத்தாயும், தோழன் நாகலிங்கமும் அருகில் வீற்றிருப்பதையும் அறிந்தான். அவன் மனது மிகவும் வேதனைப் பட்டது. கையில் பட்ட காயமும் வலிக்க ஆரம்பித்தது. குழம்பினான்!

“தம்பி! வேலையில் நிரம்ப ஜாக்கிரதையுள்ள உனக்கே இந்த விபத்து ஏற்பட்டதென்றால், யாரும் நம்ப மாட்டார்களே! எல்லாம் நமது போதாத காலந்தான். அந்தப்பெண் சமயத்தில் வந்து உதவி செய்திரா விட்டால் இன்னும் எவ்வளவு அவஸ்தைப் பட்டிருப்பாய்?” என்றாள் அந்த மாது தாயன்பு சுரக்க.

கோபாலன் எழுந்து உட்கார்ந்தான்.

“கோபு! காயம் கொஞ்சம் பெரிது, பேசாமல் படுத்துக்கொள், பலவீனமடைந்திருக்கிறாய். அந்த ஜமீன்தாரின் பெண் அபிராமி இன்று உனக்குச் செய்த உபகாரம் மறக்க முடியாதது. தன் சேலையிலிருந்து துணியைக் கிழித்தல்லவா உன் காயத்தைக் கட்டியிருக்கிறது; என்ன! அந்தப் பெண்ணின் மனிதாபிமானம்! என்றான் அவனின் உத்தமத் தோழனாகிய நாகலிங்கம்.

கோபாலனின் வெளிறிய முகத்திலே ஒரு பிரகாசம்! காரணமற்ற களிப்பு! அதை நாகலிங்கம் மட்டும் நெஞ்சுக்குள் உணர்ந்தான்.

## 3

இரண்டு வாரங்களுக்கப்பால், ஒரு மாலை வேளை. மனோகரமான மங்கமாருதம்! ஜமீன்தார் வீட்டுக்கரு

கிலுள்ள பூந்தோட்டத்திலே ஆசை நிறைந்த இரு உள்ளங்களின் சந்திப்பு! சம்பிரதாயமான நாணம், மடம், அச்சம், முதலியவைகள் அங்கு தலைகாட்ட வில்லை. கோபாலன் மெதுவாகப்பேசினான். "தாங்கள் அன்று எனக்குச்செய்த பேருபகாரம் மறக்கக் கூடியதல்ல. அதற்கு நான் எனது நன்றியைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்."

"அதை யார் மறக்கச்சொன்னார்கள்? மறக்கவே வேண்டாம். உங்கள் நன்றியும் எனக்கு உடன்பாடு தான், ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இந்த மரியாதைப் பதங்கள் எனக்கெதற்கு? நான் தங்களுக்கு எஜமானியல்லவே!" என்றாள் அபிராமி குறும்புப் புன்னகையோடு.

"என்னவிருந்தாலும் நான் ஒரு ஏழை; கூலிக் காரன். செல்வத்தில் பிறந்து, செல்வத்திலே வளர்ந்து, செல்வச் செழுமையிலே புரளும் தங்களை......"

அபிராமி சட்டென்று தன்கரத்தால் அவன் வாயைப்பொத்தினாள். "அதைத்தான் சொல்லவேண்டாமென்கிறேன். அப்புறம் நான் அழுவேன். பணக் காரன் வீட்டிலே பிறந்ததற்காக எனக்கு இந்தத் தண்டனையா? போதும். இனிமேல் சொல்லாதீர்கள். என் துரையல்ல!" என்றாள் இறைஞ்சிய பார்வையோடு.

பொங்கி எழுந்த ஆர்வத்தோடு கோபாலன் அவளை அணைத்துக் கொண்டான். இருவரும் தங்களை மறந்து இன்பக் கடலில் மூழ்கினார். முத்த மழை பெய்தனர். ஒத்த மனம் படைத்த காதலரின் சேர்க்கையில் பொங்கிப் பெருகிற்று இன்பம்!

எவ்வளவு நேரம் அந்த நிலைமையிலிருந்தோமென்பது இருவருக்குமே தெரியாது. சூரியன் மறைந்து கீழ்த் திசையில் பௌர்ணமிச் சந்திரன் உதித்தான். மங்கிய செவ்வொளி எங்கும் படர்ந்தது!

தன் தாயின் அழைப்புக்குரல் கேட்டு திடுக்கிட்டாள் அபிராமி! சுயநினைவு பெற்றாள்! "அந்தோ! எவ்வளவு நேரம் தாமதித்து விட்டேன்! என் தாயார் கோபிப்பார்களே! அன்பே! மறவாமல் நாளைக்கு வாருங்கள். இனி என்னால் உங்களை விட்டுப் பிரிந்திருக்க முடியாது. சீக்கிரத்தில் ஏதாவது செய்தாக வேண்டும். என் தாயாருக்கு என் விஷயத்தில் பூரண அனுதாபமுண்டு. உதவியும் கிடைக்கும். ஆனால் தந்தைதான் உடும்புப் பிடி! அதைப் பற்றிக்கவலையில்லை! அன்பரே! எல்லாம் நாளை யோசிப்போம், சென்று வருகிறேன்" என்று கூறிவிட்டுப் பிரியாமல் பிரிந்தாள் அபிராமி.

கோபாலன் எதையோ பறிகொடுத்தவன் போல வீட்டை நோக்கி நடந்தான். எங்கெங்கோ முட்டிமோதிக்கொண்டான். அவன் மனது ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிக்கிடந்தது "காரியமோ மிகப்பெரிது, பொருளாதாரம் சம்பந்தப்பட்ட வரையில் ஜமீன்தாரின் வாசற்படியை மிதிக்கவும் நமக்கு யோக்யதையில்லை. ஆனால் அபிராமியின்றித் தனித்து வாழ்வதென்பதும் இனி முடியாத காரியம். என்ன நடந்தாலும் சரி, "காதல்" அஃதின்றேல் "சாதல்" இரண்டிலொன்றுதான் தேவை ஒரு வீரத் தமிழனுக்கு!" இது சரியான முடிவுதான். சமூதாயம் ஒப்பவேண்டுமே!

காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றது. ஜமீன்தாரின் புதிய மாளிகையின் வேலை பூர்த்தியாயிற்று.

கோபாலன் — அபிராமி காதல் விருட்சம் செழித்து ஓங்கி வளர்ந்திருந்தது. அதைக்கண்ட ஜமீன்தாரிணி பார்வதியம்மாளின் மனதில், இன்பமும் துன்பமும் போட்டியிட்டுக் குழப்பத்தை விதைத்தன. அவரது தாயன்புக்கு ஒரு சோதனைக் காலம்! கருணைக்கு ஒரு கடும் பரீட்சை!

## 4

ஆண் பெண் உடலுறவு சம்மந்தப்பட்ட வரையில், அது என்றேனும் ஒருநாள் வெளிக்கு வந்தே தான் தீர வேண்டும். அதை மறைத்து விட நினைப்பது அசல் மூடத்தனம்! அபிராமியும் கோபாலனும் அறிவிலிகளன்று. இதை நன்கு உணருவார்கள். எனவே அவர்கள் எதிர்பார்த்த படியே "செய்தி" விமலானந்தரின் காதுக்கு எட்டி விட்டது! பாவம்! அவர் எப்படிச் சகிப்பார் இந்தப் பேரவமானத்தை? விதவைப் பெண்ணுக்கு இன்பமெதற்கு? அது சாஸ்திர விரோதமல்லவா? சம்பிரதாயத்துக்குப் புறம்பல்லவா? குடும்பத்திற்கு இழுக்கல்லவா?

அவரது நரம்புகள் துடித்தன. இரத்தம் கொதித்தது! கோபக்கனலை வீசியது கண்கள்! நெஞ்சு படபடத்தது!

"ஆஹா! அந்தப் பிச்சைக்கார ஈனசாதிப் பயலுக்கு அவ்வளவு ஆய்விட்டதா? அவனுடைய ஜாதியென்ன, யோக்யதை யென்ன, செய்திருக்கும் காரியமென்ன? ஆகட்டும் இனி அவன் ஊரில் பிழைப்பதைப் பார்க்கிறேன்!" என்று ஆர்ப்பரித்தார் விமலானந்தர். மதவெறியனே இதமறிய மாட்டான் பணக்கொழுப்பும் சேர்ந்துவிட்டால் சொல்ல வேண்டுமா சொரூபத்தை!

'மளமள' வென்று அபிராமியின் அறைக்குச் சென்றார் விமலானந்தர். அபிராமிக்கு அவர் முகத்தைக்கண்டதும் விளங்கிவிட்டது செய்தி. பணிவாக, ஆனால் சற்றுதைரியத்தோடு எழுந்து நின்றாள் அந்த அபலைப்பெண்!

"ஏ! முண்டைப்பிசாசே! நீயா என் மகள்? இல்லை! ஒருக்காலுமில்லை! என் மகளாயிருந்தால் எனக்கு நீ இத்தனை அவமானம் தேடிவைப்பாயா? குடும்ப கௌரவத்தைக் குலைப்பாயா? ஆம்! நான் செய்தது தவறுதான்! அன்று உன் தாயின் பரிதாபத்துக்கு இறங்கினதால், உன் தலைமயிர் நாவிதன் கையினின்றும் தப்பியது. சுமங்கலிப் பெண்களைப் போல் நாகரிகமாக உடுத்தவும் சம்மதித்தேன். அதற்குச் சரியான பாடம் கற்பித்து விட்டாய். என் குலத்தைக் கெடுத்த கோடரிக்காம்பே! த்தூ! நீயும் பிழைக்க வேண்டுமா?" என்று கர்ச்சித்தார் விமலானந்தர்.

மூண்டுவிட்ட கோபத்தின் உச்சாணிப்படியிலிருந்தார். சுய அறிவைத் துறந்தார். அந்த விழிகள் எரித்தன அபிராமியின் உணர்வை!

அந்தக் குரலில் தோன்றிய 'கடுமை' அவளை நடுங்க வைத்தது. அவள் தொண்டையில் ஏதோ கட்டைபோன்று அடைத்தது. பதிலொன்றும் பேசவில்லை. ஆனால் அவளது கண்களினின்றும் சூடான கண்ணீர் வெளிப்பட்டது. அடக்க முடியாத துக்கத்தால் மார்பகம் விம்மித்தணிந்தது! சண்ட மாருதத்தில் அகப்பட்ட மாந்தளிர்போன்று அவளது உடல் நிற்க முடியாமல் தள்ளாடிற்று! சப்த நாடிகளும் ஒடுங்கின. கசக்கியெறிந்த கோழிக் குஞ்சு போல் சுருண்டு விழுந்தாள் சுடர்க்கொடி!

## 5

கோபாலனும், நாகலிங்கமும் பலத்த யோசனையில் ஆழ்ந்திருந்தனர். இருவர் மனதிற்குள்ளும் பெரிய பிரச்சினை புகுந்துள்ளதென்பதை அவர்களது கருத்த முகங்கள் காட்டின.

"கோபு! விமலானந்தர் இன்று முடிவாகச்சொல்லியனுப்பி விட்டார். நாளை இரவுக்குள் ஊரை விட்டுத் தாண்டிவிட வேண்டுமாம்! இல்லாவிடில் ஆபத்து விளையுமாம்! என்ன பணத்திமிர்! நாம் இதை லேசாக நினைப்பதற்கில்லை. பணம் பத்தும் செய்கிறது. அதற்கு நாம் பாடம் கற்பிக்க வேண்டும்! ஆனல், அபிராமியின் எண்ணம் சாதகமாயிருந்தாலொழிய மீறுவது கடினம்" என்றான் நாகலிங்கம்.

"அபிராமியும் தன் முடிவை நேற்றே தெரிவித்துவிட்டாள். மதமெனும்பேய் பிடித்த தந்தையாரின் தொல்லை மிஞ்சிவிட்டதாம். கொல்லவும் பார்த்தாராம்! எப்படியோ தாயின் சம்மதியைப்பெற்று விட்டாள். இன்றிரவே அவளை அழைத்துக்கொண்டு வெளியேற வேண்டும். இல்லாவிடில், நாளை விடிந்தால் அவளது பிணத்தைத் தான் பார்க்க முடியுமாம்! என்ன சங்கடம்!" என்றான் கோபாலன். அவனது நெஞ்சம் கலங்கியது!

"கோபு! கோழைகளாயிருந்தால் ஒன்றும் நடைபெறாது. மனித முயற்சியில் நமக்கு நம்பிக்கையுண்டு. இம்மாதிரி காரியங்களில் நமக்கு உதவியளிக்க, எத்தனையோ சங்கங்களும், ஸ்தாபனங்களும் தோன்றியுள்ளன! அவர்களது உதவியை நாடாமலிருப்பது நமது குற்றம். இதோ நான் இப்பொழுதே திருச்சி விதவா விவாக சங்க (புரோகித மறுப்புச்

சங்க) காரியதரிசிக்கும், பரமக்குடியிலுள்ள நம் தோழர்களுக்கும் தகவல் கொடுத்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடிக்கிறேன். நீ உன் தாயாரை இப்பொழுதே பரமக்குடிக்கு வண்டியேற்றி அனுப்பிவிடு. நடக்கிறபடி நடக்கட்டும்!'' என்றான் நாகலிங்கம். அவனது வார்த்தைகள் உறுதியாகவும், பலம் பொருந்தியதாகவும் ஒலித்தன.

கோபாலன் நெஞ்சிலே மீண்டும் தைரியம் சுரந்தது! நாகலிங்கம் ஒரு பெரிய குடும்பத்துப் பிள்ளையாகவும், தனக்கு உத்தமத் தோழனாகவும், ஊருக்குள் சிறிது செல்வாக்குடையவனாகவும் இருப்பதால், அவனது உதவியிருந்தால் காரியம் சித்தியாகுமென்பதில் அவனுக்குச் சந்தேகமில்லை.

நாகலிங்கத்திற்குக் கோபாலனிடம் அளவு கடந்த பிரேமை! சமதர்க் கொள்கையில் சலியாத பற்றுதல்! பெண்கள் விடுதலையில் பெரிய மோகம்! கோபாலன் நாட்டிற்குத் தேவைப்பட்ட வீர வாலிபன் என்பது அவன் முடிவு. எனவே சமய சஞ்சீவியானான் தனது நண்பனுக்கு.

இரவு மணி 12 இருக்கும். நிலவு தாவள்யமாகக் காய்ந்தது! ஜமீன்தாரின் வீட்டுக் கொல்லைப்புறத்தில், மரம் மட்டைகளெல்லாம் அசைவற்று நித்திரையிலாழ்ந்திருந்தன! எங்கும் ஒரே நிசப்தம்! அவ்வேளையில், மூன்று மனித உருவங்கள் ஜமீன்தார் வீட்டினின்றும் வெளிப்பட்டு, மெதுவாகக் கொல்லை வழியே நடந்து வேலியைத்தாண்டி மறைந்தன. அந்தச் சம்பவம் அவர்களை வழியனுப்பிய ஒரு உண்மைத் தாயின் இதயத்திற்கும், வானத்தில் பிரகாசிக்க களங்கமற்ற சந்திரனுக்கும் தான் தெரியும்!

## 6

"கோபாலன் நமக்குக் கீழ்ப்படிந்து ஊரை விட்டுச் சென்றால் பிழைக்கட்டும், இல்லாவிடில் அவன் குடிசைக்கு நெருப்புவைத்து அடியோடு கொலைத்தே விடுவது!" என்ற ஒரு மனிதத் தன்மையற்ற ஏற்பாட்டைச் செய்து முடித்திருந்தார் விமலானந்தர். அவரது மனம் எந்த இழிவான செயல்களுக்கும் துணிந்து விட்டது! கோபாலனையும் மகளையும் எண்ணிக் கொதித்தாரே ஒழிய, நிகழ்ச்சிக்குரிய காரணத்தை நினைத்துப் பார்க்க நேரமில்லை.

அன்று அவர் வீட்டில் ஒரு விசேஷம்! இறந்துபோன அவரது தந்தைக்கு, ஆண்டுக்கு ஒரு முறை புரோகிதர் மூலமாக உணவுப்பொருள் அனுப்புவது. அதற்குப் பெயர் "திதி" அல்லது "திவசம்". பெரிய சமாராதனை, தானதர்மங்கள் வெகு தடபுடல்!

கோபாலன் ஊரைவிட்டுத் தொலைந்தான் என்ற செய்தி கேட்டு அவர் சரிவர மகிழ்ச்சியடைவதற்கு முன்னால், "அபிராமியும் சேர்ந்து!" என்ற செய்தி அவரது உச்சிமயிரைப் பிடித்து உலுக்கிவிட்டது! மனம் இடிந்துபோய், ஒருவினாடி அசைவற்று நின்று விட்டார்! அந்த நிலைமையில், அபிராமியின் படுக்கையில் கிடந்ததாக ஒரு கடிதம் அவரிடம் கொடுக்கப்பட்டது. அவரது உள்ளத்தில் ஒரே வேதனைச்சுழல்! அது மிகச்சுருக்கமாகவும், சூடாகவும் எழுதப்பட்டிருந்தது. மெல்ல அந்தக்கடிதத்தைப் படித்தார்.

சாதிவெறியும், சம்பிரதாயப் பித்தும், பணத்திமிரும் படைத்த தந்தைக்கு! வணக்கம்.

பால்ய விதவை, பருவகாலத்தில் படும் வெந்துயரம் உங்கள் நெஞ்சை உறுத்தவில்லை! சாத்திரங்களையும், பழக்க வழக்கங்களையும் நம்புகிறவன், மனித இதயம் படைத்தவனை

இருக்க முடியாது என்பதைத் தாங்கள் மெய்ப்பித்தீர்கள்.

பணத்திலே புரளும் உங்களைவிட ஏழையாகிய கோபாலன் பல்லாயிரம் மடங்கு உயர்ந்தவர். உங்கள் கொடுமை எல்லைமீறிவிட்டது! என்னால் பொறுக்கமுடியவில்லை. மடிந்து விடுவதே முறை. ஆனால் எனக்கு மாளத்துணிவு பிறக்கவில்லை. காதலரோடு வாழப் புறப்பட்டு விட்டேன்! குற்றமாயின் மன்னியுங்கள்.

நான் வயது வந்தவள். சட்டம் என்னைத் தடுக்காது. எனவே, சுயமரியாதை முறைப்படி விரைவில் எங்கள் கலியாணம் நடைபெறும் என்பதையும், தங்களால் எங்களுக்கு எவ்விதத் தீங்கும் விளைவிக்க முடியாது என்பதையும், அறிவிக்க விரும்புகிறேன்.

அன்புத்தாய்க்கு என் வணக்கம் உரித்தாகுக.

தங்கள் மகள்,

அபிராமி.

ஜமீன்தாரின் முகத்திலே பிரேதக்களை தட்டிற்று! சொல்ல முடியாத வேதனை! அடித்து வைத்தகல் விக்கிரகத்தைப்போல அசைவற்று உட்கார்ந்து விட்டார்!

சந்தர்ப்பத்தையறிந்த "பரலோக தபாற்பெட்டிகள்" கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு கம்பி நீட்டின! சற்றுமுன் ஒரே குதூகலமாக விளங்கிய அந்த பெரிய மாளிகை, சிறிது நேரத்தில் விரிச்சென்று போய் விட்டது. ஒவ்வொருவர் முகத்திலும் சோகத்தின் பிரதிபிம்பம்! துயரத்தின் நிழல்! வினை விதைத்த விமலானந்தர் தினையறுக்கவில்லை!

## 7

அந்தத் துக்ககரமான நாள் கழிந்து, மறுநாளும் வந்தது. விமலானந்தரின் மனப்புண் ஆறவில்லை. பார்வதியம்மாள் கணவரது துயரங்கண்டு வருந்தினாள் என்றாலும், அவரது மனதை மாற்ற

முயற்சியாமலிருக்க வில்லை. சதா அவர் அருகிலிருந்தபடியே பலவிதத்திலும் அவரைத் தேற்றி வந்தார் அந்த அம்மாள்.

பரமக்குடியில் திருச்சி விதவா விவாக சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற அபிராமி—கோபாலன் காதற் கலப்பு மணச்செய்தி, தம்பதிகளின் அழகிய உருவப்படத்தோடு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. கோபாலன் தன் கலியாணப் பிரசங்கத்திலே விதவா விவாக சங்கத்தையும், தனக்குப் பேருதவியளித்த நாகலிங்கம் முதலான தோழர்களையும் பாராட்டியும், விதவா மணத்தின் அவசியத்தைக் குறித்தும், உருக்கமாகப் பேசியிருந்தான்.

கையில் பிடித்த பத்திரிகையோடு விமலானந்தர் சோபாவொன்றில் சாய்ந்திருந்தார். அவரைப்பார்த்தபடியே அருகில் நின்றிருந்தாள் பார்வதியம்மாள். அவள் மனதில் ஆயிரம் எண்ணங்கள்!

தம்பதிகளின் புகைப்படத்தை உற்றுப்பார்த்தவண்ண மிருந்தார் விமலானந்தர். அபிராமியின் பார்வை ஏனோ அவர் மனதைக் கலக்கியது. அவரது நெஞ்சிலே என்னமோ "விசு"க்கென்று உதைத்த மாதிரியிருந்தது. கண்கள் கண்ணீரைச் சிந்துவேன் என்று பயமுறுத்தின! அவரது கபடமற்ற மனம் இளகிவிட்டது. அவரது புத்தியில் ஒரு பெரிய உண்மையின் சுடர் பிரகாசித்தது! அவரது அறிவுக் கண் திறந்தது! அர்த்தமற்ற வைதிகம், நியாயமற்ற சாதி முறை, சம்பிரதாயப் பழக்க வழக்கம்முதலிய மேகப் படலங்கள் விலகின! பாசம் வென்றது. புதிய மனிதராகத் தோன்றினர். தழதழத்த குரலில் சொன்னர்:

“பார்வதி! நமக்கிருப்பது ஒரே குழந்தை! அதன் சுகவாழ்விலே தான் நமக்குப்பெருமை. அபிராமியைவிடப் பெரிது நமக்கு வேறென்ன இருக்கிறது? வீணாகச் சிறுவயதில் மணம் முடித்து அறுதலியாக்கினோம். பாவம்! அவள் என்ன செய்வாள்? நாமே அவளை அந்தக்கதிக்கு ஆளாக்கினோம். குற்றம் நம்முடையது, இல்லை என்னுடையது. நான் என் மகளுக்குப்பெரிய கொடுமை செய்துவிட்டேன்! இன்று உணருகிறேன். போதாதென்று அந்தக் குற்றமற்ற வாலிபனுக்கும் தீங்கிழைக்கத் துணிந்தேன். என்ன மதியீனம்! இந்தப் பாவங்களை நான் எப்படித் தொலைப்பேன்! அபிராமியின் கடிதம் என்னைக் கொல்லுகிறதே! நானும் ஒரு தந்தையா?” குமுறினார் விமலானந்தர். சின்னக் குழந்தையைப் போன்று தேம்பியழுதார்.

தெருக் கோடியிலே ஒரு பண்டாரம் பாடிக்கொண்டிருந்தான் சித்தர் பாடலொன்றை.

அஞ்ஞானம் போயிற் றென்று தும்பீபற—பர
மானந்தங் கொண்டோ மென்று தும்பீபற
மெஞ்ஞானம் வாய்த்த தென்று தும்பீபற—மலை
மேலேறிக் கொண்டோ மென்று தும்பீபற.

அல்லல்வலை யில்லை யென்றே தும்பீபற—நிறை
ஆணவங்க ளற்றோ மென்றே தும்பீபற
தொல்லைவினை நீங்கிற் றென்றே தும்பீபற—பரஞ்
சோதியைக் கண்டோ மெனத் தும்பீபற.

பார்வதியின் மனம் பரவசமடைந்தது. அகம் குழைந்து நாவு குளிரப் பேசினாள்;

“அம்மாடி! என் வயிற்றில் பால் வார்த்தீர்கள்! இன்று தான் என் மனம் குளிர்ந்தது! கவலையை

விடுங்கள்! உள்ளதைச் சொல்லுகிறேன். நானில்லாமல் அபிராமி வெளியேறவில்லை. இத்திருமணத்திற்கு நானே காரணம். என் பெற்ற மனம் அவள் நன்ருய் வாழ்வதைப் பார்க்கப் பித்துக்கொண்டது. சம்மதித்து விட்டேன்!”

பெரும் வியப்போடு மனைவியைப் பார்த்தார் விமலானந்தர். அந்தப் பார்வையிலே அன்பு கொப்பளித்தது. பாசம் பெருகிற்று.

“கோபாலன் சிறந்த வாலிபன. ஏழை என்ருலும் குணக்குன்று! அவனே நமது பெண்ணுக்கேற்ற கணவன். மன்னிக்கவேண்டும். அபிராமியைத் தன் கணவரோடு வரச்சொல்லி கடிதமெழுதட்டுமா?” என்று கேட்ட வண்ணம் கணவரின் மடிமேல் உட்கார்ந்து அவரைத் தன்னிரு கரங்களாலும் தழுவிக்கொண்டாள் பார்வதியம்மாள்! பழந்தம்பதிகளிடையே ஒரு புதிய உணர்வு பூத்தது!

மறுநாள் காலை. பொருளற்ற வைதுகததுனா இருளகற்றுபவன் போல், கதிர்களை வாரியிறைத்துக் கொண்டு கிளம்பினுன் சூரியன்!

பெற்ற மகளின் வாழ்வை விரும்பிய இரண்டு இதயங்கள், பரமக்குடியை நோக்கிப் பயணம் தொடங்கின!

# யோகி.

## 1

சீதாவுக்கு வயது 17. பருவத்தால் கனிந்த பாவை. இன்பத்தின் ஓவியம். சௌந்தர்யத்தின் சிகரம். ஆனல் அவள் ஒரு பேதை! குழந்தையைப் போன்ற இதயம் படைத்தவள்! சுலபத்தில் ஏமாறும் சுபாவம். காரணம் கல்விக்கும் அந்தக் காரிகைக்கும் நிரம்ப தூரம்.

சீதாவுக்கு மணமாகி 6 முழு வருடங்கள் கழிந்து விட்டன. அவள் ஒரு பரிதாபத்துக்குரிய விதவையல்ல. "கடன்பட்டும் பட்டினி, கலியாணம் செய்தும் சன்யாசி" என்பதைப் போல, சீதா புருடனுள்ள விதவை! கணவனைத் துறவாத கைம்பெண். காதலை நுகராத கன்னி.

சீதாவின் தந்தை சிவசைலம் பிள்ளை பெரிய செல்வந்தர். பழமை விரும்பி, சமயப்பற்றால் பழுத்த சைவப்பழம்! தன் செல்வ மகளுக்குச் சிறு வயதிலேயே கலியாணம் செய்ய வேண்டுமென்று விரும்பினர். அதற்கு ஒரு கருவியாக உபயோகப் படுத்தப்பட்டவன், சோமசுந்தரம் என்கிற மாணவன். பச்சைப் பசுங்குழந்தைகள்! "கலியாணம்" அவர்களுக்கு ஒரு விசேஷ வேடிக்கையாகத் தோன்றியது! விளையாட்டென்று மகிழ்ந்தனர்.

கலியாணத் தமாஷ் முடிந்தவுடன், சோமசுந்தரம் தன் பெற்றோர்களோடு சென்னைக்குச் சென்று விட்டான். அவன் அப்பொழுதும் பள்ளிக்கூடத்தில் படிக்கிறன். சோமசுந்தரத்தின் பெற்றோர்களும் செல்வந்தர்கள் தான். ஆனல், பத்தாம் பசலிப் பிரகிருதிகள்! ஒரே செல்வமகன் சோம

சுந்தரம். எனவே, டையனின் ஆடம்பரச் செலவுகளுக்கு தாராளமாகப் பணம் கிடைத்து வந்தது.

இப்படியாக வருடங்கள் பல கழிந்தன. காலச் சக்கரத்தின் வேகத்தால் பல மாற்றங்கள்.

சோமசுந்தரத்தை ஒரு புதிய "மைன"ராக்கி விட்டது பணம்! அவனைப் பெரிய ஷோக்கிலாவாகவும், காமுகனாகவும் ஆக்கி விட்டனர் அவனது புதிய சகாக்கள். பணம் பத்தும் செய்யுமல்லவா?

சட்ட மறுப்பு வீரர்கள் நிலை மறந்து பதவிக்கு அலைவதைப் போல, சோமசுந்தரத்தின் மனது பல புதுப்பெண்களை நாடி அலைந்தது! பதவி வேட்டையாளர்க்குக் கிடைத்த "குல்லாக பட்டர்" களைப் போன்று, அந்தப் பெண் வேட்டைக்காரனுக்கும் தகுந்த பட்டர்கள் இருவர் கிடைத்தனர். அவனது சகல ஆசைகளுக்கும், பேச்சுகளுக்கும், செயல்களுக்கும், அவர்களே பாஷ்ய கர்த்தாக்கள், ஆசிரியர்கள், வழிகாட்டிகள்.

"என்ன பிரதர்! விபசாரம் ஒரு கலையோன்னோ! பேரின்ப வழிகாட்டின்னா அது! தெரியாமலா, நம்ம பெரியவாள் கோவில்களிலே தாசிகளை வச்சிருக்கா? எல்லாம் நம்ம க்ஷேமத்திற்குத்தான். கிருஷ்ண பரமாத்மா செஞ்சது என்னவாம்?" என்று மனங் கூசாமல் சொல்லுவார்கள் அந்தப் பட்டர்கள். காரியத்திலே அவர்களுக்குக் கண்.

சீதா ஒரு அழகுக் குவியல்தான். என்றாலும் சோமசுந்தரத்தின் ஆடம்பர விழைவுக் கண்களை அவள் அழகு வசீகரிக்கவில்லை. "நாகரிகம் தெரியாத பட்டிக்காட்டுப் பெண்!" இதுதான் காரணம்.

எனவே தன் மாமனார் வீட்டுக்கு வருவதையே அவன் நிறுத்தி விட்டான். சிவசைலம் பிள்ளை மிகுந்த வருத்தமடைந்தார். சீதாவை அழைத்துப் போக வேண்டிப் பல கடிதங்கள் எழுதினார், ஆள் மூலமும் சொல்லியனுப்பினார், பயனில்லை. மேலும் சோமசுந்தரம் விடுத்த பதில் அவரை வேண்டுமென்றே அவமானப்படுத்துவதைப் போலிருந்தது.

"படிப்பு இல்லாத அசடுகள் ஏன் பிழைக்க வேண்டும்? தெய்வ மொழி சமஸ்கிருதமோ, ஆங்கிலமோ கல்லாதவள். தகப்பன் ஒரு முட்டாள்! நாகரிகமும், நாஸுக்கும் தெரியாதவளை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. நான் விரும்புகிற விதத்தில் சீதா இருந்தால் ஏற்றுக்கொள்வேன்."

இவை தாம் சோமசுந்தரத்தின் விசித்திரமான பதில், "பக்கா வைதிகர், ஆங்கிலத்துவேஷி, பழைமைப் பிரியர். அவர் சீதாவுக்கு இனிமேல் கல்வி கற்பிக்கவா போகிறார்? இப்படியாவது அவள் ஒழியட்டும்" என்பதே அவனது நோக்கம். குரு கடாட்சத்தின் விளைவு.

"நாகரிகம்" என்ற வார்த்தையை நல்வழியில் பயன்படுத்துவார்கள் அறிஞர்கள். சோமசுந்தரம் பயன்படுத்திய விதம் ஒரு புதிய தினுசு! குயுக்தி முறை!

2

கோவிந்தராஜன் ஒரு "பிரைவேட்" வாத்தியார். ஆங்கிலத்திலும், சமஸ்கிருதத்திலும் வல்லவன். நிரம்ப கெட்டிக்காரன். எனவே சிறு வயதில் கல்வி கற்காத பலர் அவனிடம் படித்தனர். அவன் வெளியூர்க்காரன். வாலிபப்பருவம்; சற்று அழகனுங்கூட.

பச்சையாபுரத்து வாசிகளுக்கு அவனிடம் ஒரு கௌரவம்! மரியாதை! கோவிந்தராஜனின் பேச்சும், தோற்றமும் யாரையும் வசீகரிக்கும் தன்மையுள்ளவை. சிவசைலம்பிள்ளை அவனது சைவப்பற்றையும், சிவபக்தியையும் வியந்தார்! இப்படி ஒரு கண்ணியமுள்ள ஆசிரியர் கிடைத்ததைக் குறித்து அவருக்குப் பெருமகிழ்ச்சி!

சீதாவுக்கு அறியாத பாலப் பருவத்தில் மணம் முடித்ததின் விளைவு அவர் மனதை உறுத்தாமலில்லை. தன் அறியாமைக்கு மிகவும் வருந்தினார். என்ன செய்வது! "சோமசுந்தரம் விரும்பியபடி, சீதா கல்வி கற்றாலாவது, கணவனோடு கூடி வாழமாட்டாளா," என்பதே அவரது ஆசை. எனவே சீதாவுக்குக்கல்வி கற்பிக்க முற்பட்டார் சிவசைலம். ஆசிரியர் கோவிந்தராஜன்.

சீதா படிக்க ஆரம்பித்து 6-மாதங்கள், மிகவும் அக்கரையோடுதான் பயின்றுவந்தாள். அவள் துர்ப்பாக்கிய நிலையும் பருவக்கோளாறும், என்னென்னவோ நினைக்க வைத்தன. மனம் அவளை எங்கெங்கோ இழுத்துச் சென்றது. அவள் நெஞ்சுரமற்ற நேரிழை! நினைவுக் கனவில் புயல்காற்று மோதியது. எல்லாம் விதியின் பயன், ஆண்டவன் செயல் என்று அவள் நினைத்தாள்.

ஆசிரியர் கோவிந்தராஜனின் சுவையுள்ள, அர்த்தம் நிறைந்த பேச்சும், செய்கையும், அவள் மனதைக் கலக்கிவிட்டன. சீதா மன உறுதியற்றவளாக இருப்பதை கோவிந்தராஜன் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டான். அவளது குழந்தை யுள்ளத்தில், கடவுளின் காமக் கதைகள் பல சொல்லி, சிற்றின்பத்தின் ஆசையலைகளை எழுப்பிக் கொண்டே

வந்து ஒரு பெரிய கொந்தளிப்பை உண்டாக்கிவிட்டான். ஆம்! அதிக சிரமமில்லாமல் ஒரு நாள் அந்தக் "கனி"யை ருசிபார்த்துவிட்டான் கோவிந்தராஜன். ஒரு பேதையின் பரிதாப நிலைமை யடையப் பெற்றாள் சீதா. எதிர்காலத்தை எண்ணிப்பாராமலேயே தன் உடலை அர்ப்பணித்து விட்டாள் அந்த "உத்தம" ஆசிரியனுக்கு.

கொஞ்ச நாள் இந்த சேர்க்கை மிகவும் ரகசியத்திலிருந்து வந்தது. சிவசைலம் பிள்ளையும் கோவிந்தராஜனை சந்தேகிக்கவில்லை. வீட்டிலும் யாருக்கும் சந்தேகம் கிடையாது. காரணம், அவன் ஒரு சிவபக்தன்! ஆச்சாரசீலன்! நீறு பூத்த மேனியன்! தெய்வத்திருத்தொண்டன்! ஆனாலும் இயற்கை தன் வினையை முடித்து விட்டது. அதற்குப் பாரபட்சமேது? சீதாவின் வயிற்றில் "கரு"த்தரித்தது! எத்தனை பெரிய சங்கடம்! சீதா தன் பாதி உயிரை இழந்தவளானாள். மலைபோன்ற அந்தத் துன்பத்தை - அவமானத்தை - ஏற்கச் சகியாத அவளது மனம் உடைந்து பாகாய் உருகியது. ஒரு பயங்கரமான பூதத்தை எதிரே கண்டவள் போல நடுங்கினாள்! பதறினாள்!

கோவிந்தராஜனின் மூளை வேலை செய்தது. பலபல யோசித்தான். ஒரு முடிவுக்கு வந்தான். சீதாவைப் பலவிதத்தும் இன்மொழிகளால் தேற்றினான். தன் கடைசி மூச்சுள்ள வரையில் அவளைக் காப்பாற்றுவதாக வாக்களித்தான். கடவுள் மீது ஆணை வைத்தான். அவனது வார்த்தைகளால் ஒரு புதிய நம்பிக்கையும், உற்சாகமும் பெற்றாள் சீதா. "சாகத்துணிந்தவருக்கு சமுத்திரம் முழங்காலளவு" எனவே சம்மதித்தாள் அந்த ஏற்பாட்டுக்கு.

மறுநாள் இரவு நடுச்சாமம். ஆகாயத்தில் ஒரே மப்பும் மந்தாரமும். குளிர்ந்தகாற்று சில்லென்று வீசியது. கருகும் மென்றிருந்த அந்தச்சாலை ரஸ்தாவில், ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்லும் அந்தக் குறுகிய பாதையில், போர்வையால் போர்த்தப் பட்ட இரண்டு உருவங்கள் வேகமாக நடந்து, பச்சையாபுரத்து எல்லையைத் தாண்டின. வானம் இருண்டு பல பலவென்று கண்ணீரை உதிர்த்தது

## 3

இரண்டு வருடங்கள் கழிந்தன.

சிவசைலம்பிள்ளை அடைந்த சோகத்திற்கு அளவுசொல்ல முடியாது. துரும்பாக இளைத்து விட்டார். தன் மகளின் நடத்தைக்கும், அந்த போலீச் சைவனைப் பெரிதாக மதித்த தன்னுடைய குருட்டு "சமய"ப்பற்றைக் குறித்தும், அவர் மிகவும் துக்கித்தார். அவரது பழமைப்பற்றும், அர்த்தமற்ற நம்பிக்கையும், ஆச்சார அனுஷ்டானங்களும் ஆட்டம் கொடுத்தன. பெருங்குழப்பமடைந்தார்.

* * *

சென்னையில் சோமசுந்தரத்தின் லீலா விநோதங்கள் வெகு மும்முரம். அவன் பெயர் தெரியாத காலாடிகளே சென்னையில் கிடையாது. சதா உல்லாசப் பொழுது போக்கு தான். எல்லாம் பணத்தின் மகிமை.

அன்று ஏனோ அவன் முகத்திலே சந்தோஷக் குறியில்லை. வாடிப்போயிருந்தது.

"என்ன மிஸ்டர் பாலு! உங்களால் முடியாதா? நீரும் நாகராஜனும் சேர்ந்து, எவ்வளவு பெரிய

இடங்களையெல்லாம் சூனுவாக முடித்து வைத்தீர்களே! இதுதானு ஒரு சிரமம்?'' என்முன் சோமசுந்தரம், கெஞ்சும் குரலில்.

"சோமு! பெரிய செல்வந்தர் வீட்டுப் பெண்களாயிருந்தால்தான் என்ன! மன உறுதியற்றவர்களை மயக்குவது சுலபம். ஆனல் இந்தக் 'கோமதி' அந்த ரகத்தைச் சேர்ந்தவளல்ல. அவள் மனம் வைரம் பாய்ந்திருக்கிறது. ஆடவர்களை அவள் வெறும் புழுக்களுக்குச் சமமாக மதிக்கிறுள். சென்ற வாரம் தியாகராயநகரில் கூடிய பெண்கள் மகாநாட்டில் அவள் செய்த பிரசங்க முழக்கத்தைக் கேட்டிருந்தாயானல், அப்பா! அவளை நீ கனவிலும் நினைக்க மாட்டாய்." என்முர் பானு என்ற பானுசாமி அய்யர். அவர் முகத்திலே அசடு வழிந்தது.

"நான் இப்பொழுது செவிடன். அந்தக் கதையெல்லாம் என் காதில் ஏருது. அவள் பேரழகு என்னைக் கொள்ளைக் கொண்டுவிட்டது. அவளையடையாவிட்டால் என் ஆவி நிலைக்காது. அன்று கடற்கரையில் ஒரே விநாடிதான் பார்க்க முடிந்தது. மின் வெட்டுப்போல் மறைந்து விட்டாள். ஆஹா! என்ன செளந்தர்ய வதனம்! அந்தக் கண்களில் என்ன ஜொலிப்பு! அந்தக் குரலில் தான் என்ன இனிப்பு! நானும் உங்கள் தயவால் எத்தனையோ பெண்களை ருசித்து விட்டேன். அவர்களெல்லாம் பெண்களல்ல, பேய்கள்! வளர்த்துவானேன், எப்படியாவது அவளை நான் சேர்ந்தே தீரவேண்டும். இல்லாவிடில் என் உயிரை மாய்க்கவேண்டும்,'' என்றுபிதற்றினன் சோமசுந்தரம்.

பானுசாமி பலத்த யோசனையில் ஆழ்ந்தான்.

"ஆசாமிக்கு மோகம் மீறி விட்டது. காரியத்தை எந்த வழியிலாவது முடிக்காவிட்டால், நம் தொப்பை தான் வாடிப்போக நேரிடும். ஆனால் அந்தக் கோமதியோ சாதாரணப் பெண்ணல்ல. சுதந்திரதாகங்கொண்ட வீராங்கனை! கௌரவமான அந்தஸ்திலிருப்பவள். அவளைச் சரிப்படுத்துவதென்றால்.... அது நடக்கிற காரியமல்ல! வெறும் பகற்கனவு. ஆனால்....... ஆம்! அது தான் சரி. நமது கடைசிப் பாணத்தைத் தான் பிரயோகிக்க வேண்டும். நாமென்ன அவ்வளவு கோழையாகவா போய்விட்டோம்? நல்லது. அவளும் அந்த வேலைக்காரக் கிழவியும் தனியாகத்தான் வண்ணாரப்பேட்டையில் குடியிருக்கிறார்கள். முதலில் அந்தக் கிழவியை வெள்ளையப்பனைக் கொண்டு சரிப்படுத்த வேண்டும். ஆம்! மிருகத்தனமாகவாவது சோமுவின் ஆசை பூர்த்தியாவதே நமக்குப்பரம திருப்தி!" அவர் தன் யோசனையை உருவாக்கிவிட்டார். திட்டம் வகுக்கப்பட்டுவிட்டது.

"சோமு! ரொம்ப சிரமந்தான். இருந்தாலும், எப்படியாவது முடிச்சுடறேன். முதல்லே ஒரு 200 விலையம் வேணும். ஆனைக்கே, அவளை நீ சுயப்பிரக்ஞையோடு அடையமாட்டாய். சம்மதந்தானே?" என்றான் பானுவைய்யர்.

சோமசுந்தரம் தலையை அசைத்தான். ஆனால் அவன் மனதில் ஒரு சங்கடம், குழப்பமான ஒரு வகை உணர்ச்சி ஊசலாடியது.

## 4

அன்று, சென்னை வண்ணாரப்பேட்டை "அனாதைப் பெண்கள் விடுதி''யின் ஆண்டு நிறைவுக்

கொண்டாட்டம். ஏராளமான பெண்களின் கூட்டம்! அதன் ஸ்தாபகரும், காரியதரிசியுமான தோழியர் கோமதியின் அன்றைய சொற்பொழிவு பெண்கள் உலகைத் தட்டி எழுப்பியது. வேஷக்கார ஆடவர்களின் அட்டூழியங்களைப் "பிட்டுப்பிட்டு"க் காண்பித்தது. பெண்கள் மனதில் ஒரு பெரிய புரட்சியும், உத்வேகமான உணர்ச்சியும் கிளப்பியது கோமதியின் வீரப் பேச்சு!

விழா இனிது முடிவு பெற்றது. பகலெல்லாம் பட்ட சிரமத்தால் கோமதிக்கு மிகவும் களைப்பு. இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு, வேலைக்காரக் கிழவியால் கொடுக்கப்பட்ட பாலையருந்தி விட்டு, நிம்மதியாகப் படுத்தாள் படுக்கையில்...., அவ்வளவுதான் கொஞ்ச நேரத்தில் அவள் நினைவிழந்தாள்! அப்புறம் நடந்த "சிறையெடுக்கும் படலங்கள்" ஒன்றும் அவளுக்குத் தெரியாது.

ஆனால், கோமதி சுய நினைவு பெற்றபோது, தான் ஒரு புதிய சிங்காரப் படுக்கையறையில் மஞ்சத்தில் சயனித்திருப்பதைக் கண்டாள். என்ன வியப்பு! எதிரில் ஒரு வாலிபன். அந்த முகம் பழக்கமானதைப் போல் தோன்றுகிறது. அவள் மனதில் கோடி நினைப்புக்கள். சகிக்கமுடியாத சங்கடங்கள்.

அவள் பிரக்ஞை பெற்று எழுவதை எதிர் பார்த்திருந்த சோமசுந்தரம், மெதுவாக அருகில் சென்றான்.

"சீதா! என்னை மன்னிக்க வேண்டும். உனக்குப் பெரிய அபசாரம் செய்துவிட்டேன். நான் மகா பாபி!" என்றான் தழதழத்த குரலில். அவன் கண்

களில் நீர் வழிந்தது.

மெல்ல எழுந்து உட்கார்ந்தாள் கோமதி. உடம்பெல்லாம் வலி. அந்த வாலிபனை உற்று நோக்கினாள். அவள் உள்ளத்திலே ஒருமின்னல் தாக்குதல். உண்மையின் ஒளி வீசிற்று! "ஆம். சந்தேகமில்லை, என் கணவர்தான்." அவள் நெஞ்சுக்குள் பலவித உணர்ச்சிகளின் கொந்தளிப்பு! பதை பதைப்பு!

சோமசுந்தரம் நடுக்கத்தோடு கோமதியின் கரங்களைப் பற்றினான்.

"சீதா!"

அவன் தொண்டை கம்மியது. அவனால் பேச முடியவில்லை. கண்களில் நீர் சுரந்தது. அடுத்த விநாடி அவனது விரித்த கரங்களில் புகுந்தாள்; கோமதியென்ற புனை பெயர் கொண்ட சீதா! ஒரு புதிய இன்பத்தின் ஊற்றுக்கண் திறந்தது அவர்கள் கூட்டுறவில்! வாழ்க்கையின் விசித்திரமான நிலையில், விநோதமான சம்பவச் சூழலில் சிக்கித்தவித்தனர் அந்தச் சதியும் பதியும்.

பின்னர் இருவரும் தங்கள் சோகக் கதைகளைப் பரிமாறிக் கொண்டனர். மனம் திறந்து உரையாடினர். நாணம் ஏனோ அவர்கள் நாவைக் கடிக்கவில்லை.

சீதா, தன்னை அந்தப் போலியாசிரியன் வஞ்சகமாகக் கெடுத்ததும், கர்ப்பவதியான நிலைமையில், காப்பதாக வாக்களித்துச் சென்னைக்கு அழைத்து

வந்ததும், ஒரு வாடகை வீட்டில் தன்னை அனாதை யாக விட்டு விட்டு ஓடி விட்டதும், பின்னர் ஒரு குழந்தை பிறந்து இறந்துவிட்டதும், அதிலிருந்து வாழ்க்கையில் வெறுப்பு கொண்டு, கோமதி என்ற பெயரோடு சமூக சீர்திருத்தச் சேவையில் இறங்கின தும், **"பெண்கள் அனாதை விடுதி"** ஸ்தாபித்ததும், கையிலிருந்த பணமும், நகைகளுமே தன் வாழ்க் கையை நடத்திச் செல்வதையும், தன் கோழைத் தனத்தால் ஒரு பெரிய படிப்பினையைக் கற்றுவிட்ட தையும் மனம்விட்டுச் சொன்னாள்! வருந்தினாள்!

சோமசுந்தரம் அவளைத் தேற்றினான்! பின்னர் சோமு தன் சகாக்களின் போதனையால் மதியிழந்து செய்த அக்கிரமங்களையும், குழந்தைப் புத்தியால் விபசாரத்தைப் புனிதமாக மதித்து மோசம் போன தையும், சீதாவைக் காரணமில்லாமல் வெறுத்ததை யும், கடைசியாகக் கோமதியை இன்னாளென்று அறி யாமலேயே மோகித்ததும், பழிக்கஞ்சாத பாலுவின் சூழ்ச்சியாலும், பணப் பிரயோகத்தாலும், வேலைக் காரக் கிழவியைச் சரிபடுத்தி பாலில் மயக்க மருந் திடச்செய்து, அவள் அங்கு கொண்டுவரப்பட்டதும் அந்தப் பிரக்ஞையற்ற பரிதாப நிலைமையில், கோம தியை இன்னாளெனத் தெரிந்து தன்மனம் நடுங்கின தும் கூறினான். மேலும் இச்செய்கை பெரிய அவமானமாகத் தோன்றி புத்தியைத் தெளிய வைத்ததென்றும், இன்றோடு இம்மாதிரி காரியங்களைச் செய்வதில்லை என்றும், இந்த முட்டாள்தனமான குற்றத்திற்குச் சீதாவின் மன்னிப்பைப்பெற்று, அவ ளோடு கண்ணியமாக வாழ வேண்டுமென்று விரும்பு வதாகவும் கூறினான். வேண்டினான். மனப்பூர்வ

மாக தன் செய்கைக்கு வருந்தினன் சோமசுந்தரம்.

"இருவருமே கெட்டோம். ஏச்சுமில்லை பேச்சுமில்லை! இனியாவது அறிவோடும், மன உறுதியோடும் வாழ்வோம்! நம்மைப்போல ஆண்டவன் செயலையும், ஆரியரின் பேச்சுக்களையும் நம்பி, வெளிவேஷத்தால் மயங்கும் மதியற்ற மக்களைத் திருத்துவதே நமது தொண்டாக இருக்க வேண்டும்" என்றான் உருக்கத்தோடு.

சோமசுந்தரம் மீண்டும் பொங்கி எழுந்த ஆர்வத்தோடு சீதாவை அணைத்துக்கொண்டான். "மன்னித்து மறப்பது மனித குணம்" என்பதை மனதில் கொண்டனர் இருவரும்.

சோமசுந்தரம் திருந்தினன். சீதாவும் அவனும் ஒன்று கூடிவிட்டனர், என்ற செய்தி சிவசைலம் பிள்ளைக்கு எல்லையற்ற சந்தோஷத்தையளித்தது. அவர் தன் மனைவியோடு சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றார். மகள்மீதிருந்த கோபத்தையெல்லாம் உதறிவிட்டு, மகளையும் மருமகனையும் கண்டுகளித்தனர். அந்தக் கர்னாடக மாமனும் மாமியுங்கூட சீதாவை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டனர். பாசம் வென்றது. எல்லாரும் பழைய சம்பவங்களை அடியோடு மறந்தனர்.

சிவசைலம் பிள்ளை தம்பதிகளைத் தன் ஊருக்கு அழைத்துச் சென்று கொஞ்சநாள் வைத்திருக்க விரும்பினார். பட்டணத்து மாப்பிள்ளையும் பட்டிக்காட்டுப் பெண்ணும் சேர்ந்ததைக் குறித்து, பச்

சையா புரத்தில் கொஞ்சம் பரபரப்பு. ஊர்வம்பு! சாதிவெறியர்கள் சிலர் அவர்கள் "பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும், இல்லாவிடில் சாதியை விட்டு நீக்கவேண்டும்" என்று கூச்சலிட்டனர். ஆனால் அந்தப் "பூச்சாண்டி" க்கு அவர்கள் பயப் படும் நிலைமையில் இல்லாமையால், ஒன்றும் நடை பெறவில்லை. "இளைத்தவனைக் கண்டால்தான் எறும்புக்கும் கொக்கு!" என்பார்கள். அதுகூட ஆளைப் பார்த்துத்தான் கடிக்குமாம்! இப்படிச் சில மாதங்கள் கழிந்தன.

* * *

ஓர் ஆச்சரியம்! அந்த ஊரார் கவனத்தைக் கவர்ந்தார் ஓர் புதிய யோகி! அன்றுதான் நாகலா புரத்திற்கு வந்து சேர்ந்தார். சிறு வயசு. சிவந்த மேனி. சாந்தமும் பக்தியும் தவழும் முகவிலாசம். தலையில் பெரிய சடா முடி. தேக முழுதும் திருநீறு. உருத்ராட்ச மாலைகள். அரையில் ஒரு கோவணம்! இவைகள் அவரது தோற்றம். பக்கத்தில் இரண்டு சிஷ்யர்கள்! ஊரையடுத்துள்ள அடர்ந்த புளியந் தோப்பில் தங்கல் போட்டனர். அங்கு ஒரு சிறிய ஆசிரமம் அமைக்கப்பட்டது.

"யோகியால் தீராத நோயில்லை, முடியாத காரிய மில்லை, அவருக்கு அருள் மட்டும் சுரக்க வேண்டும். பிள்ளை யில்லாத குறையா? பைத்திய நிவாரணமா? பில்லிசூன்யமா? பெருவியாதியா? வியாபார விருத் தியா? என்ன மகத்துவம்! அவர் இதைத்தான் செய்வார், இதைச் செய்யமாட்டார் என்பது கிடை

யாது. அவர் ஒரு அவதார புருஷர்தான்! சந்தேக மில்லை. இவ்வளவுக்கும் அவர் ஏதாவது பிரதி பலனைக் கருதுகிறாரா? ஊஹூம், அதுதானில்லை. ஏதோ நாமே பார்த்துக் கொடுத்ததை, அதுவுங்கூட சிஷ்யர்கள் தான் பெற்றுக் கொள்ளுகிறார்கள். என்ன மகத்துவம்! என்ன மகத்துவம்!" இவைகள் ஊர்ப் பேச்சுகள் ஆயின. யோகியாருக்கு விளம்பரங்கள் இப்படி நான்கு திக்கும் பறந்தன!

இரண்டே நாட்கள். சுற்றுப்புற கிராமாந்திரங்களின் பக்தர்கள் கூட்டம், புளியங்கோப்பை ஒரு சந்தைக்காடாக ஆக்கிவிட்டது. காணிக்கைகள் ஏராளமாகக் குவிந்தன. யோகியின் அருளைவேண்டி இரவு பகலாக அங்கு காத்திருந்தனர் பல பெண்கள். அவர்களில் முதன்மை ஸ்தானம் வகித்தாள் கருப்பாயி என்ற ஒரு இளம் பெண்.

பச்சையாபுரத்துக்கும் நாகலாபுரத்துக்கும் 10 மைல்கள். அங்கிருந்தும் சென்றனர் பக்தகோடிகள். சீதாவும் சோமசுந்தரமும் இதைக்கேட்டு வியப்புற்றனர். ஐயமுற்றனர். எனவே ஒரு நாள் யோகியைப் பார்க்கச் சென்றனர். அங்குள்ள நிலைமையை நுட்பமாக ஆராய்ந்தனர். அவர்கள் மனதில் பலபெரிய சந்தேகங்கள் தோன்றின. எனவே சாமர்த்தியமாக பக்தை கருப்பாயின் மூலம், சில உண்மைகளை விசாரித்துத் தெரிந்து கொண்டனர். அங்கேயே ஒரு நண்பர் வீட்டில் தங்கினர்.

"யோகியின் முகம் எனக்குப் பழக்கமானதைப் போலிருக்கிறது" என்றாள் சீதா.

"அப்படியா? அந்தச் சீடர்களின் தோற்றமும் என்னுடன் பழகினவர்களின் தோற்றம் போலத் தான் காணுகிறது. என்ன ஆச்சரியம்!" என்றான் சோமசுந்தரம்.

இருவரும் அந்த நண்பரிடம் தங்கள் அபிப்பிரா யங்களை வெளியிட்டனர். மூவரும் சேர்ந்து வெகு நேரம் யோசித்த பின்னர், ஒரு தீர்க்கமான முடி வுக்கு வந்தார்கள். பாமர மக்களின் மூடநம்பிக்கை தெளிய வேண்டும். வஞ்சகர்களை வெளிப்படுத்த வேண்டும். இதுவே தங்கள் நோக்கம், லட்சியம், எனக் கொண்டுவிட்டனர் சீதாவும் சோமசுந்தர மும். தங்கள் இழிவைக் காட்டிலும் சமுதாய இழி வைப் பெரிதெனக் மதித்தனர். எனவே செயலில் இறங்கத் துணிந்துவிட்டனர்.

## 5

யோகியார் வீற்றிருந்தார் ஒரு சைவபழம பாக! காலைநேரம். உதயகால பூசை நடக்கிறது. ஆசனத்தில் அவரைச் சுற்றிலும் பக்த கோடிகள் தியானத்தில் மூழ்கி யிருந்தனர். பஜனை ஒருபுறம். மேள தாளங்கள் ஒருபுறம். வேத கோஷங்கள் ஒரு புறம் விண்ணை முட்டின!

திடீரென்று போலீஸ்காரர்கள் தோன்றினர். யோகியாரும், அவரது இரண்டு சீடர்களும் வெளியே அழைத்து வரப்பட்டனர். "சர்க்கார் விளையல்" மாட் டப்பட்டது! யோகியார் சினந்தார். பதைத்தார். பயன்..........? பக்தர்கள் ஒரேயடியாக திகைத்து விட்டனர். அரசாங்கத்தை வைதனர். மனம்போன

வாறு பேசினர், எனினும் யோகியார் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார். சம்பவம் ஊரையே கலக்கி விட்டது! எங்கும் பரபரப்பு. பல உருவில் வதந்திகள்!

*  *  *

இரண்டு தினங்களாய் விசாரணை நடைபெறுகிறது. சிவசைலம்பிள்ளை போன்ற பல பெரிய மனிதர்கள் கோர்ட்டினுள் வீற்றிருக்கின்றனர். யோகியும் சீடர்களும், கைதிக் கூண்டில் நிற்கின்றனர். அவர்கள் வேஷமெல்லாம் கலைக்கப்பட்டு விட்டன. வெளியில் ஏராளமான ஜனக் கூட்டம். கருப்பாயி சாட்சியம் கொடுக்கிறாள்:-

"எனக்குக் குழந்தைகள் கிடையாது. குழந்தை என்றால் எனக்குப் பைத்தியம்! யோகியின் மகத்துவங்களை நம்பி அவரையண்டினேன். ஒரு நாளிரவு ஆசிரமத்திலேயே தங்கி யோகியின் அருளைப்பெறும்படி இந்தப் "பக்கப் பூசாரிகள்" கட்டளையிட்டனர். நான் தங்கினேன். இன்னும் சில பெண்களும் தங்கினார்கள். ஆனால் அந்தோ! என்னை இப்பாவிகள் மூவரும் என் விருப்பத்திற்கு விரோதமாக, பயங்கரமாக அனுபவித்தனர்! கற்பையும், மானத்தையும் குலைத்தனர். வாழ்வையே கெடுத்தனர்". கண்ணீர் விட்டுக் கதறினாள் கருப்பாயி.

அந்தக் காட்சியைக் கண்ட ஜனங்கள் ஆத்திரமும் ஆவேசமும் கொண்டனர். பின்னர் சீதாவும் சோமசுந்தரமும் விசாரிக்கப்பட்டனர். அவர்கள் அந்த யோகீஸ்வரர்களை இன்னார் இன்னாரென்பதை

யும் அவர்களால் தங்கள் வாழ்க்கை எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்ட தென்பதையும், விரிவாகச் சொன்னார்கள். சிவசைலமும் விசாரிக்கப்பட்டார். திடுக்கிடச் செய்யும் உண்மைகள் பல வெளிப்பட்டன.

* * *

யோகி கோவிந்தராஜன் வேறு வழியில்லாமையால் தன் குற்றங்களை யெல்லாம் கண்ணியமாக ஒப்புக் கொண்டான். ஆனால் தன் வாக்குமூலத்தில் அவன் சொன்னான் ;

"எனது வேஷத்திற்கும் நடிப்புக்கும் மக்கள் ஆதரவும், கவுரவமும் அளித்திரா விட்டால், நான் இவ்வளவு கேவல நிலைமைக்கு வந்திருக்க மாட்டேன். பாமர மக்களின் அறியாமையே எனக்கு மேலும் மேலும் குற்றவாளியாக வசதியளித்தது. "பெண்பழி யேற்றவர்கள் உருப்படமாட்டார்கள்," என்பார்கள். அதற்கு நானே உதாரணமானேன். கிரோஸின் எண்ணெய்க்குக் குப்பையும், நெருப்பும் கிடைத்த மாதிரி, எனக்கு பாலுசாமியும், நாகராஜனும் கிடைத்தார்கள். சென்னையில் இவர்கள்தான் சோமசுந்தரத்தின் விபசார பாஷ்ய கர்த்தாக்கள்! நாட்டு மக்களின் தெய்வீக மூட நம்பிக்கையின் அஸ்திவாரத்தின் மீதே, எங்கள் கற்கோட்டையைக் கட்டினோம். லீலைகள் புரிந்தோம்! ஆனால் எங்களால் ஏமாற்றப்பட்டவர்களாலேயே நாங்கள் வெளிப்படுத்தப்பட்டோம். எங்கள் கோட்டை தகர்த்தெறியப் பட்டது. பாமர மக்களின் மூடத்தனத்திற்கு எங்கள் சரித்திரம் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கட்டும். குற்றம் முழுதும் எங்களைச் சார்ந்தவைதான்."

சோமுவின் "பேரின்ப வழிகாட்டிகள்" பானுசாமியும், நாகராஜனும் விசித்திர வாதம் புரிந்தனர். இந்து மதாச்சாரத்தில், பழக்க வழக்கங்களில் அரசாங்கம் தலையிடுகிறது என்று மிரட்டி, தப்புவதற்கு வழிபார்த்தனர். குற்றங்களை ஒப்புக்கொண்டதன் மூலம் அந்த வழியைத்தான் அடைத்து விட்டாரே குருதேவர்! எனவே யோகி கோவிந்தராஜனும், சீடர்களான பானுசாமியும், நாகராஜனும், தண்டிக்கப் பட்டார்கள். நீதிபதி, சீதாவுக்கும் சோமசுந்தரத்துக்கும் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். அவர்கள் தைரியத்தைப் பாராட்டினர்.

கைதிகளை கோர்ட்டுக்கு வெளியே அழைத்து வரும்போது, கூடியிருந்த மக்கள் போட்ட, சீதாம்மாள் வாழ்க! சோமசுந்தரம் வாழ்க! சுயமரியாதை வாழ்க! என்ற கூச்சல் ஆகாயத்தை யளாவி ஒலித்தது! மூட நம்பிக்கை நடு நடுங்கிப் போயிற்று.

யோகியின் கண்கள் சீதாவை வெறித்துப் பார்த்தன. "படீ" ரென்று தலையில் ஒரு குட்டு விழுந்தது. "எங்கேயடா பார்க்கிறாய் மர்மயோகி?" என்று முணு முணுத்தான் போலீஸ்காரன். தரையை நோக்கிற்று "திருச்சிற்றம்பலம்!"

# நான்கு வருடங்களுக்கப்பால்.

வசந்த காலம்! கதிரவனின் அந்திக்கிரணங்கள் மறைந்து விட்டன. கருக்கலிருட்டு. ஆனால் சந்திரன் புன்சிரிப்போடு வானத்திலே தவழ்ந்தான். மக்களுக்கு இன்பமூட்டும் அவனது முயற்சியிலே இளந்தென்றலும் கலந்து கொண்டது. இயற்கையறிந்த ஒவ்வொரு இதயத்திலும் புத்துணர்ச்சி! குதூகலம் பொங்கிற்று.

மாடியின் வெளிப்புறத்திலே, ஒரு பாயின் மீது வீற்றிருந்தனர், மீனலோசனியும் சிவராமனும் நிலாக்குளித்தவண்ணம்! இருவரும் நெடு நேரமாகப் பேசவில்லை. அவர்கள் மனதை அழுத்திக் கொண்டிருந்த வேதனை அவர்களை வதைத்தது. அடிக்கடி நெடிய பெருமூச்சுகள்; விவரிக்க முடியாத துன்பச் சுழலில் இருவரும் அமிழ்த்தப்பட்டிருந்தனரென்பதை, அவர்களது கருத்துச் சோர்ந்த வதனங்கள் காட்டின.

ஏதோ கனவு கண்டு விழித்தவன்போலச் சிவராமன் கேட்டான்; "அந்தக் கதையை எழுதி முடித்துவிட்டாயா மீனலோசனி?" என்று. குரலில் தடுமாற்றம்.

"இல்லை. முக்கால் பாகத்திற்கு மேல் எழுதி விட்டேன். இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கிறது. கடைசியாக ஒரு முக்கியமான கட்டத்தில் நிறுத்த வேண்டியதாய்விட்டது. அதை எப்படி முடிப்பதென்றே எனக்குத் தெரியவில்லை" என்றாள் மீனலோசனி, சற்று வருத்தத்துடன்.

"என்ன ஆச்சரியம்! மெச்சத் தகுந்த பல சிறு கதைகளை எழுதிய உன் பேனாவுக்கும், மன துக்குமே தெரியாத "முடிவு" எப்பேர்ப்பட்டதாய் இருக்க வேண்டும்!! அதை நான் கொஞ்சம் பார்க்கலாமா? ஒரு வேளை.......... என் யோசனையும் அதற்குப் பயன்படுவதாயிருந்தால்..........?"

"ஆமாம். அதைத்தான் நானும் சொல்ல நினைத்தேன். யோசனை மட்டுமல்ல சிவம்! நீதான் அந்தக் கதையை முடிக்கவேண்டும். அதைத் தொடர்ந்தெழுத என் பேனா மறுக்கிறது. மனம் பின் வாங்குகிறது. தைரியமில்லை! உன்னைத்தான் நம்பி யிருக்கிறேன்" என்றாள் மீனலோசனி ஒருவித வாஞ்சையோடு. அவள் குரல் கம்மியிருந்தது.

இருவரும் எழுந்து அறையினுள் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் எதிரெதிரே உட்கார்ந்தனர். நடுவிலே மேஜை. விளக்கின் வெளிச்சத்திலே, தான் எழுதின சிறு கதையின் கையெழுத்துப் பிரதியைப் படிக்க ஆரம்பித்தாள் மீனலோசனி. சிவராமன் கவனத்துடனும், மனக்கிளர்ச்சியுடனும் கேட்கத் தொடங்கினன்.

* * *

குழந்தைகளான மாலதிக்கும் கேசவனுக்கும் நாராயணனென்றால் உயிர்! அவன் ஒரு மாணவன். மூவரும் பள்ளிக்கூடத்தில் ஒரே வகுப்புத்தான். கேசவனும் மாலதியும் அண்ணன் தங்கைகள். செல்வந்தர் வீட்டுக்குழந்தைகள். நாராயணன் ஒரு எளிய குடும்பத்துப் பையன்தான். என்றாலும் மூவருக்

குள்ளும் மிகுந்த மனஒற்றுமை. அன்பின் பிணைப்பு! மாலதி தனக்குக் கிடைக்கும் தின்பண்டங்களிலெல்லாம் பிரியத்துடன் நாராயணனுக்கும் பங்கு தருவாள். ஒரு நாளைக்கு அவன் பள்ளிக்கூடம் வராவிட்டால், அவளுக்கு என்னமோ போலிருக்கும். அன்றைக்குப் படிப்பே ஓடாது. சதா அவன் நினைவுதான் குறுக்கிடும். பொதுவாக நாராயணனில்லாத எந்த விளையாட்டும், எந்தப் பேச்சும், எந்தச் செய்கையும் அவளுக்கு ரசிப்பதில்லை! அந்தக்குழந்தை நெஞ்சிலே நாராயணன் அழியாத ஒரு தனியிடம், தனிப்பெருமை பெற்றுவிட்டான். நாராயணன் மாலதியின்மேல் வைத்திருந்த அன்பும் இதற்கு இளைத்ததல்ல. அவனுக்கு அவள்தான் உயிர்.

அவன் அடிக்கடி மாலதியின் வீட்டிற்கு வருவான். கேசவனையும் சேர்த்துக்கொண்டு மூவரும் விளையாடுவார்கள். "நாராயணனும் மாலதியும் புருஷன் மனைவிகள், கேசவன்தான் கலியாணம் செய்விக்கும் புரோகிதன்." இந்த விளையாட்டில் அவர்களுக்கு தனிப்பிரியம், மாலதியின் பெற்றோர்கள் இதைப் பார்த்துப்பூரிப்படைவார்கள். அந்த ஏழைப் பையனைச் சேர்த்துக் கொண்டு விளையாடுவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் "குழந்தைகள் தானே! வயது வந்தால் எல்லாம் தெரிந்து கொள்வார்கள்" என்பது பெற்றோர்களின் நம்பிக்கையாக இருந்தது.

* * *

காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றது. மனித வாழ்க்கையில் பல மாற்றங்கள்! புரட்சிகள்! மாலதி

மங்கைப் பருவமடைந்துவிட்டாள். கேசவன், மேல் படிப்புக்காக சீமைக்கு அனுப்பப்பட்டான். நாராயணன் தன் ஏழைத் தகப்பனை இழந்துவிட்டான். அவனுக்கு அப்பொழுது வயது 23. "மெட்ரிக்குலேஷன்" வரையில்தான் அவனால் படிக்க முடிந்தது. வறுமையின் கொடுமை அவன் நெஞ்சைப் பிளந்தது. ஏழ்மையின் கோரம் அவன் வாழ்விலே துள்ளியது! பார்ப்பனர் நிறைந்த தென்னாட்டு அரசியல் அலுவல் துறையில், அந்த ஏழைத் தமிழனுக்கு ஒரு சின்ன உத்தியோகம் கிடைக்கவில்லை. அவன் முயற்சிகள் யாவும் வீணாயின. எனவே வேறு வழியின்றி நாராயணன் ஒரு வட்டிக்கடைக்கணக்கனாக அமர்ந்தான் 14 ரூபா சம்பளத்தில்!

மாலதியின்பால் அவன் வைத்திருந்த அன்பு, ஒரு புதிய வடிவத்தில் கனிந்து பல இன்பகரமான தோற்றங்களை அவன் மனதில் எழுப்பின. அவன் அவளது காதலுக்கு அடிமையானான். அவள் ஏன் எப்பொழுதுமே என்னருகிலிருக்கலாகாது? சீ! இது ஒரு வீண் நினைப்பு. மூடவனின் கொம்புத்தேனாசை! மாலதியை இப்பொழுது பார்க்கவே முடியாது. பார்த்தாலும் பேச முடியாது. அவள் பருவமடைந்துவிட்டவள். புனிதமான இந்து மதாச்சாரப்படி நிபந்தனையற்ற கைதியாக வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்க வேண்டியவள். மேலும் அவள் போக போக்கியத்தில் புரளும் செல்வக்குஞ்சு! அவன் ஏழ்மையில் நெளியும் எச்சில் புழு! என் செய்வது?

* * *

அன்று மாலை. என்றுமில்லாத புயல் காற்றும்

மழையும் கோரமாக அடித்தன! கால்வயிற்றுக் கஞ்சிக்குக்கரணம் போடும் ஏழை மக்களின் குடிசைகளை வாயுபகவானும் வருணதேவனும் எளிதாகக் கபளீகரம் செய்தனர்! அதுதானே தெய்வங்களின் பரம் பரைக் குணமும்?

தெருவில் தன் வீடுநோக்கிப் போய்க்கொண்டிருந்தான் நாராயணன். மாலதியின் வீட்டுக்கருகாமையில் வரும்போழுது, திடீரென மழை வந்துவிட்டமையால், மாலதியின் வீட்டிலேயே ஒதுங்க நேர்ந்து விட்டது. வேகமாகப் படிகளைத்தாண்டித் தாழ்வாரத்தில் ஏறி நின்றான். வீட்டைப் பார்த்ததும் நெஞ்சில் ஒரு மகிழ்ச்சி மலர்ந்தது. மாலதியின் பெற்றோர்கள் வீட்டில் இல்லையென்பதும், மாடியிலிருந்த மாலதி தன்னைப்பார்த்து விட்டாளென்பதும் அவனுக்குத் தெரியாது. மாலதியைப் பார்க்கவேண்டுமென்ற ஆசைமட்டும் ஊறியது அவன் உள்ளத்தில்! ஆனல் நிலைமை....? உள்ளே போகத்துணியவில்லை.

"நாராயணு! உள்ளே வாவேன்!" என்ற குரலைக் கேட்டதும் திடுக்கிட்டான் நாராயணன். அவன் மனதைக் கிள்ளியது அந்தக்குரலின் இனிமை. ஆவலோடு அந்தப்பக்கமாகத் திரும்பினன். அழகிய அதரங்களில் புன்னகை தவழ வாசற்படியில் நின்றிருந்தாள் மாலதி. இருவர் கண்களும் சந்தித்தன. ஒரு நொடியில் பல விஷயங்களைப் பரிமாறிக்கொண்டன அந்த நயனங்கள்! அவளது களங்கமற்ற யௌவனத்தோற்றம் நாராயணன் மனத்தைச் சிதறவடித்தது! ஒன்றும் தோன்றமல் பிரமித்துப்போய் நின்று விட்டான்!

நிறைந்த ஆர்வத்தோடு அவன் கரத்தைப்பற்றி உள்ளே அழைத்துச் சென்றாள் மாலதி. நாராயணன் மிகுந்த பயத்தோடு அவள் பின் தொடர்ந்தான். பால்ய நட்பாயினும் பருவம்....?

"ஏன் இப்படி நடுங்குகிறாய்? வீட்டில் யாருமில்லை, பயப்படாதே! பெரிய கோழையாகிவிட்டாயே. முன்போலிங்கு வருவதற்கென்ன? என்னை அடியோடு மறந்துவிட்டாயா?" என்று துணிவோடு கேட்டாள் மாலதி.

"மாலதி! நான் என்ன சொல்லப்போகிறேன்! உனக்குத் தெரியாததொன்றில்லை. என் உயிருள்ளவரைக்கும் இந்த நெஞ்சிலிருந்து உன்னை அகற்றுவது முடியாது. ஆயினும் நான் ஏழை! உங்கள் குடும்பத்திற்கும் எனக்கும் தொண்டைமானுக்கும் கோட்டிக்குமுள்ள வித்தியாசம்! முன்போல உன்னிடம் நெருங்கிப்பழகுவது முடியாத காரியம். கேசவனும் வெளிநாடு போய்விட்டான். நான் இங்கு வந்து என்ன? வீணாக உன் பெற்றோரின் அதிருப்திக்கு ஆளாகவேண்டி நேரிடும். ஆனால் இந்த மிருதுவான கரங்களால், நீ அன்று கொடுத்த தின்பண்டங்களை இப்பொழுது நினைத்தாலும் வாயினிக்கிறது!" அவள் கரங்களைப்பற்றி ஆசைப்பெருக்கால் முத்தமிட்டான் நாராயணன். அவன் தேகமெங்கும் குபீலெனப் புளகாங்கிதம் பூத்தது!

மாலதியின் கண்கள் களிப்புடன் ஜொலித்தன! நாணத்தால் முகம் சிவந்தது. நூலிழைபோல் உடல் துவண்டது. அவள் சொன்னாள்;

"நாராயணு! நாம் விளையாடுவோமே; அந்த விளையாட்டை நம் வாழ்க்கையில் அனுசரிக்கும் நாள் வந்துவிட்டது. ஆனல் நீ சொன்ன "ஏழை!" என்ற வார்த்தை என் மனதை அறுக்கிறது. ஆம்! பணப்பேய் பிடித்த என் பெற்ரேர்கள், மனிதத் தன்மையை உணரமாட்டார்கள். பணம்! பணம்! அவர்களுக்கு வேண்டுவது அதுதான்! மனிதனல்ல. அந்தோ! இச்சமயத்தில் அண்ணுவும் ஊரில் இல்லையே! நமது கதி...........?" அதற்கு மேல் மாலதியினல் பேசமுடியவில்லை. தொண்டை அடைத்துக்கொண்டது. அவள் கண்கள் கலங்கின. விக்கலும் விம்மலும் பீறிட்டன.

நாராயணன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவன் கண்களும் கலங்கிவிட்டன. எனினும் ஆதரவோடு மாலதியைத் தன் மார்புறத் தழுவிக்கொண்டான். வெளியே பயங்கரமான காற்றும் இடியும் மின்னலும் கலந்த மழை கோரமாக "ச்சோ" வெனப் பொழிந்துகொண்டிருந்தது. அந்த இரண்டு களங்கமற்ற இளம் இருதயங்களிலும் புகுந்து கொண்டு உலுப்பிய உணர்ச்சியின் அலைகள், துக்ககரமான நினைப்பின் நிழல்கள், அந்த அர்த்தமற்ற பயங்கரமான சப்தத்தோடு சென்று கலந்தன!

* * *

ஒரு வருடத்திற்கு முன்னலிருந்தே, மாலதியின் கலியாணத்திற்கு அவள் தந்தை கைலாச முதலியார் ஏற்பாடு செய்து வந்திருக்கிருர். பாவம், இது அவளுக்குத் தெரியாது.

ரெங்கூனின் பிரபல நகை வியாபாரி சம்பந்த முதலியார் பெரிய சொத்துக்காரர். கைலாச முதலியாரின் தூரபந்து. அவருக்கு இரண்டாந்தாரமாக மாலதியைக் கொடுப்பதாக வாக்களித்திருந்தார் கைலாச முதலியார். இதையறிந்தபோது, மாலதி உண்மையிலேயே திடுக்கிட்டுப்போய்விட்டாள்! தன்மனோ நிலையை அவளால் வெளியிடாதிருக்க முடியவில்லை. தான் நாராயணனைக் காதலிப்பதைக் குறிப்பால் சொன்னாள் பெற்றோர்களிடம். ஆனால், பயனில்லை. வெளிப்படையாகச்சொன்னாள். அவர்களது வசவுக்கும், தூற்றலுக்கும், கோபத்திற்கும் ஆளானதைத் தவிர்த்து, வேறு விமோசனம் ஏற்படவில்லை. மாலதி அதற்குச் சிந்திய கண்ணீர் வெறும் பாழ்ங்காட்டிற் கடித்த நிலவாய் விட்டது! அவர்கள் பிடிவாதம் பூரணமாக வலுப்பெற்றது.

"நான் பெற்ற மகள், அவளிடம் எனக்கில்லாத அக்கறை, உரிமை அவளுக்கெப்படி வந்தது? நான் அவருக்கு ஏற்கனவே வாக்களித்து விட்டேன்; அதைக் காப்பது என் கடமை. திக்கற்ற ஒரு தரித்திர நாராயணனை மனதில் கொண்டிருக்கும் இந்தச் சிறுக்கியால், என் நாணயம் காற்றில் பறப்பதா? அது முடியாது. அவசியம் கலியாணம் நடந்துதான் தீரவேண்டும்!" என்று ஒரே மூர்க்கத்தனமாகப் பேசினார் கைலாச முதலியார். அவர், தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்னும் தகைமையாளர்.

பாவம்! மாலதி என்ன செய்வாள்? சமுதாயத்தின் அடிமைகளாகக் கருதப்படும் சுதந்திரமற்றப் பெண்ணினத்தில் ஒருத்தி; நாராயணனுக்கு தைரி

யமும், உற்சாகமும் ஊட்டிய அவள் மனம் இடிந்து சரிந்து விட்டது. அவள் அடைந்த துக்கத்திற்கு அளவு கோலுதல் முடியாத காரியம். துயரமே வடிவானுள் மாலதி. அவள் சிந்திய கண்ணீர்த் துளிகளில் நாராயணன் உருவம் தோன்றி "உன் உறுதி எங்கே? கோழையாக இருக்காதே!" என்று சொல்லுவதைப் போலிருந்தது, அவள் பிரமை கொண்ட மனத்திற்கு. பேதலித்தாள். பித்தாகிப்பிதற்றினுள்.

கதையை வளர்த்துவானேன், சமூகத்தில் உண்மைக்கும், நியாயத்திற்கும் முக்கியத்துவமில்லை. செல்வத்திற்குத்தான் செல்வாக்கு! எனவே பணத்திமிரும், அத்துடன் சேர்ந்த மூடப்பிடிவாதமும் தம் காரியங்களைச் செய்து முடித்தன.

மாலதி பலவந்தமாக சம்பந்த முதலியாருக்கு மனைவியாக்கப்பட்டாள். என்ன கொடுமை! நாராயணன் பதறினுன், கண்ணீர் வடித்தான், சிறு குழந்தையைப் போன்று தேம்பித்தேம்பி அழுதான். வேறு என்னதான் அவனுல் செய்யமுடியும்? அவன் ஏழை! திக்கற்றவன்!! எனவே வாழ்வற்றுப் போனுன்.

சம்பந்த முதலியாரோடு அழுத கண்ணும், உடைந்த மனமுமாக ரெங்கூனுக்கு அனுப்பப்பட்டாள் மாலதி. அவளது பரிதாப நிலைமையைக்கண்ட கல்நெஞ்சும் கரைந்தது! என்ன பயன்? கரையவேண்டியவர்க்குக் கரையவில்லை.

* * *

சம்பந்த முதலியாருக்கோ வயது 49. முழுக் கிழவரல்ல. எனினும் அருவருப்பைத்தரும் தோற்றம். பூதாகாரமான உடல். விகாரம் பொழியும் முகார விந்தம். அழுத்தமான பெரிய தொண்டை. குணத்திலோ கொள்ளிக் கட்டைதான்! இத்யாதி சிறப்புகளைப் பெற்றவர். எப்படியோ நான்கு வருடங்கள், ஆம்! நான்கு முழு வருடங்களை அந்த மனிதப்பன்றியோடு கழித்துவிட்டாள் மாலதி. அவள் உருவம் அடியோடு மாறிவிட்டது. வாழ்வின் இன்பம் அஸ்தமித்துவிட்டது. ஆனால் உணர்வு இழக்கவில்லை. "பெண்கள் சுதந்திரம் பெறவேண்டும்" என்பதில் அவளுக்கு எழுந்த ஆர்வத்தால், அதை வலியுறுத்தும் வகையில் பத்திரிக்கைகளுக்குச் சிறு கதைகள் எழுதினாள். அந்தச் சேவைதான், அவளுக்குக் கொஞ்சம் ஆறுதலும், ஊக்கமும் அளித்து வந்தன. பெண்ணடிமை அவள் மனதைப் பெரிதும் பாதித்தது.

"நாராயணனை அவள் மறக்கவில்லை. மறக்கவும் முடியாது. அவன் தன்னிடம் கொண்டிருந்த உண்மைக்காதலை நினைக்கும் போது, அவள் மனம் உருகிவிடும். உடம்பு நெருப்பால் தகிக்கப்பட்டதைப் போல சூடு கொள்ளும். நாராயணனுக்கு மாலதி பல கடிதங்களெழுதினாள். ஆனால் அந்தப் பரிதாபத்திற்குரிய பெண், நாராயணனிடமிருந்து ஒரு கடிதமும் பெறவில்லை. என்றாலும்............

"லோசனி!" என்று கூவினான் சிவராமன். மீனலோசனி படிப்பதைவிட்டு நிமிர்ந்து பார்த்தாள். சோகத்தால் விழுங்கப் பட்டிருந்தான் சிவராமன்.

அவன் முகத்திலே விவரிக்க முடியாத பல வேதனையின் சின்னங்கள். கண் இமைகளில் முத்துப்போல தங்கியிருந்த நீர்த்திவலைகள், கன்னங்களில் உருண்டு ஓடின.

"ஏன் !" என்றாள் மீனலோசனி பதைப்புடன்.

"லோசனி! என் இதயத்தின் ஒரு மூலையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பழம்பெரும் நினைப்புகளைக் குத்திக் கிளப்பி விட்டாய். ஆம்! துன்பம் தோய்ந்த நமது வாழ்க்கை, அப்படியே இதில் பிரதிபலிக்கின்றது. ஆனால் ஒரு பெரிய தவறு நேர்ந்திருக்கிறது. அவன் அவளுக்குப் பல நெஞ்சுருக்கும் கடிதங்கள் எழுதினான். அவைகளில் ஒன்றுகூட அவளுக்குக் கிடைக்கவில்லை. இதில் ஏதோ பெரிய மோசடி நடந்திருக்கிறது. அவன் அவளை ஒருக்காலும் மறந்திருக்கவேமாட்டான்" என்றான் சிவராமன். குரலில் வேதனை குமுறியது.

மீனலோசனி திகைத்துப்போய்விட்டாள்! அவளது முகம் ஆழ்ந்தயோசனையை அறிவித்தது. ஆம்! இருக்கலாம், அவருடைய வேலையாகத்தானிருக்க வேண்டும். சந்தேகப்பிரயாணியல்லவா அது! கொஞ்சமும் பயமில்லை, அதை வைத்துக்கொண்டு மாரடித்துக் கொள்ளட்டும். சிவம்! இன்னும் கொஞ்சந்தானிருக்கிறது, படித்து விடுகிறேன்; என்று மேலே படிக்க ஆரம்பித்தாள் மீனலோசனி.

* * *

சம்பந்த முதலியார் ஒரு பரம்பரை நோயாளி. இரத்தக்கொழுப்பு உடம்பில் இருந்த வரையிலும்

நோய் தலைகாட்டவில்லை. அவரது உடல் தளர்ந்ததும் பிணி முளைத்துவிட்டது. அவர் படுக்கையோடு படுக்கையாய் விட்டார். இத்தோடு அவருக்கு ஏற்பட்ட பக்கவாத ஜன்னியால் ஒரு காலும், கையும் சூம்பிப்போய் விட்டன. முகத்தில் ஒரு கோணல்! அவரைப் பார்க்கச் சகிக்கவில்லை. ஆம்! அவர் மீண்டும் எழுந்திருக்கும் அறிகுறிகளே இல்லையென்று சொல்லலாம். எழுந்தாலும் மனித உருவமிருக்காது. இப்படியாகச் சில மாதங்கள் கழிந்தன.

விதவைப் பெண்களின் பரிதாப நிலைமை மாலதிக்கு நன்ருகத் தெரியும். அதைப்பற்றி அவள்தான் பல கதைகள் எழுதியிருக்கிருளே! அந்த நிலைமை தனக்கே வரப்போவதை நினைக்கும்போது அவள் மனம் கலங்கும். ஆனல் அடுத்த விணுடி நாராயணன் நினைப்பும் வந்துவிடும். ஒரு அர்த்தமற்ற ஆசை, ஒரு வேதனை கலந்த மகிழ்ச்சி, அவள் உள்ளத்தைக் கிளர்த்தும். பலப்பல எண்ணுவாள்; கனவு லோகத்திலே சஞ்சரிப்பாள்.

"கணவரின் தற்போதைய நிலைமை, தான்படும் அவஸ்தை, காதலைக்கொலை செய்த மூடத்தகப்பனின் செய்கை" இவைகளைக்குறித்துத் தன் மனதில் பொங்கிக் கொண்டிருந்த ஆத்திரத்தை ஒரு கடிதமாகத் தீட்டினுள் மாலதி. தந்தைக்கு அனுப்பினுள். ஆனல் அதைப் படிக்கும் பாக்கியம் அவர் பெறவில்லை! கடிதம் அவரிடம் சேருமுன்னரே திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பினுல் மரணமடைந்தார் கைலாச முதலியார்.

சீமையிலே படித்துக்கொண்டிருந்த கேசவனுக்கும், ரெங்கூனில் புருஷன் வீட்டிலிருந்த மாலதிக்கும் சாவுத் தந்திகள் பறந்தன. மாலதியின் கணவர் சம்பந்த முதலியார் மிகுந்த கலக்கத்துடன் அவளுக்கு விடை கொடுத்தனுப்பினர். அவரது புத்தி பெரிதும் மாறிவிட்டது. மாலதியின் இன்ப வாழ்வு தன்னால் வியர்த்தமாவதை எண்ணும்போது அவர் உண்மையில் வருத்தமடைந்தார்.

மாலதி தன் பிறந்த ஊரையடைந்த போது, முதன் முதலில் அவளைச் சந்தித்தவன் நாராயணன். நான்கு வருடங்களாக நாதமொடுங்கிக்கிடந்த இரண்டு இதயங்களும் குரலெடுத்து மலர்ந்தன. ஆனால் மணம் வீசவில்லை! ஏன்? அவள் பிறன் மனைவி! என்ன மகத்தான கொடுமை.

* * *

இரண்டு வாரங்கள் கழிந்தன. கேசவனும் வந்து சேர்ந்தான் அவனது ஐரிஷ் மனைவியுடன். ஊருக்குள் பெரிய பரபரப்பு! பேச்சுப்பந்தல்கள்! பாவம்! ஒரு தமிழன் வெள்ளைக்காரச்சியைக் கலியாணம் செய்துகொண்டு விட்டால், என்ன நஷ்டம் வந்துவிட்டதோ தெரியவில்லை. நல்ல வேளை, கேசவன் ஒரு தீவிர பகுத்தறிவு வாதியாக மாறிப்போயிருந்தான். அவனுக்கு ஜாதி, மதம், சாஸ்திரம், வழக்கம் இவைகளெல்லாம் கசந்துவிட்டன. எனவே, தான் காதலித்த அந்த ஐரிஷ்மாதை மனப்பூர்வமாக மணந்து கொண்டான். அந்தப்பெண் தன் உயிரையே கேசவன்மீது வைத்திருந்தாளென்றால் அது பொருத்தமானதே. திருமணம் தெய்வீகமான

தென்றும், அதற்குப் பெற்ரோர்களின் அனுமதி தேவையென்றும் அவன் கருதவில்லை. கலியாணம் ஒருதனிப்பட்ட ஆண் பெண் சுதந்திரம். அதனை அறிவோடு செய்யவேண்டும். செய்து கொண்டான் கேசவன்.

தந்தையார் மாலதிக்கும், நாராயணனுக்கும், செய்திருக்கும் மலைபோன்ற தீங்கை - அநியாயத்தை - கண்டு மனம் புழுங்கினன் கேசவன். தங்கள் மூவருக்குள்ளுமிருந்த பழைய அன்பின் பிணைப்பும், அதற்குத் தந்தையிட்ட முள்வேலியும் அவன் மனத்தைக் குழப்பின. தீர்மானிக்கப்பட்ட மன உறுதியுடன் அவன் மாலதியிடம் சொன்னன் :-

"நடந்திருப்பது மிக மோசமான காரியம். இதற்கு நாம் பரிகாரம் தேடவேண்டும். பெண்ணுரிமை பேச்சளவில் பலன் தராது. ஆம்! அந்த ரெங்கூன் பெரியவர், தான் செய்த கேட்டிற்குப் பிராயச்சித்தமாக மாலதியை மறக்கவேண்டும், அல்லது நாம் மறக்கச் செய்யவேண்டும். நீதிக்குப் போராடுவோம். சட்டம் நமக்குத் துணை நிற்கும். எது எப்படியாஞலும் சரி, நீங்கள் சுகமாக வாழவேண்டும். ஒரு உண்மைச் சகோதரனின் கடமை என்னுடையது. நாராயணனின் காதல் குன்ருதிருந்தால், உனக்கும் பிரியமிருந்தால், சதியும் பதியுமாக மகிழ்ந்திருங்கள். நமது இளமையின் தோழமை அருத்தமுள்ளதாகட்டும்."

தமையனின் தைரியமும், ஜீவகாருண்யமும் நிறைந்த பேச்சு, மாலதியின் மனதில் ஒரு புரட்சி

யை உண்டாக்கிற்று; புத்துணர்ச்சி பெற்ருள். அவளது முகம் மலர்ந்தது. ஆனல் சற்று வருத்தத்துடன் சொன்னுள் :-

"அண்ணு! துன்பம் நிறைந்த நான்கு வருடங்கள்! கொடுமையான சோதனைக்காலம்! பொருளாதார எமனுலும், திடச்சித்தமற்ற கோழையாகிய என்னுலும், சோக நெருப்பிலே தள்ளப்பட்ட நாராயணன், இன்னும் என்னைக் காதலிப்பதானுல்........... நான்..........."

மனதில் பொங்கித் ததும்பும் உணர்ச்சிகள் அத்தனையும் கண்களிலே பிரதிபலிக்கச் சிவராமனை நோக்கினுள் மீனலோசனி. வெளிறிப்போயிருந்த அவன் முகத்திலே புதிய இரத்த ஓட்டம். மங்கியிருந்த கண்களிலே ஒரு திவ்யமான ஒளி! அவன் மார்பு படபடத்தது! உதடுகள் பேசத் துடித்தன.

நொந்துபோன அந்தக் களங்கமற்ற நெஞ்சுக்குள்ளே, அன்புக்கவசமிடப்பட்டுத் தன் வடிவம் ஜொலித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள் மீனலோசனி. நாற்காலியை விட்டு எழுந்தாள். சிவராமனின் அகன்ற மார்புக்குள் ஆவேசத்தோடு பாய்ந்தாள் அந்த வனிதா ரத்னம்.

"கண்ணே! லோசனி! என் வாழ்வு வரண்டு விட்டதென்ருலும், உன்னை நினைத்தே உயிர் வாழுகின்றேன். என்ருலும் இப்படி நடக்குமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இந்த நான்கு வருடங்களாக என் உயிர் கொஞ்சங் கொஞ்சமாகப் போய்க் கொண்டிருந்தது. இன்று என்னைக் காப்பாற்றிவிட்

விட்டாய். இனி நான் புது மனிதன்! எதற்கும் பின் வாங்கேன், எதுவரினும் ஏற்பேன்." என்று கூறி, கரைகடந்த ஆர்வத்தோடு மீனலோசனியை இறு கத்தழுவி, அவளது பவழம் போன்ற அதரத்தில் அன்பு முத்தமிட்டான்.

* * *

படிகளில் "தடதட"வென்ற சப்தம்! யாரோ நடந்துவரும் ஓசை. அடுத்த விநாடி, மீனலோசனி யின் தமையன் பத்மநாபனும், அவனது ஆங்கில மனைவி மிஸஸ் ஒலனல் பத்மநாபனும் அந்த அறைக் குள் நுழைந்தனர். காதலன் மார்பில் களிப்பு வெறி யில் மூழ்கியிருந்த மீனலோசனி, பொருக்கென எழு ந்து விலகி நின்றாள். அவர்களிருவர் மனதும் நாணி யது. பரிதாபத்தோடு அவர்களைப் பார்த்தனர்.

"மன்னிக்கவேணும்! ஒரு முக்கியமான விஷ யம். உங்களுக்கு உடனே தெரிவித்துவிட வேணு மென்ற ஆவல்! அவசரமாக ஓடி வந்தோம். உங் கள் சுகவாழ்க்கையில் கவிழ்ந்திருந்த இருட்படலம் நீங்கிவிட்டது. பயமும், துன்பமும் தீர்ந்தன!" என் றான் பதற்றத்தோடு பத்மநாபன்.

"என்ன சமாச்சாரம்?" என்று கேட்பதுபோல், சிவராமனும் மீனலோசனியும் பத்மநாபனை ஆச்சரி யத்துடன் நோக்கினர்.

"கொழும்பிலிருந்து தந்தி வந்திருக்கிறது. மீன லோசனியின் புருஷர், பைரவசுந்திர முதலியார் நே ற்று இரவு 10-மணிக்குக் காலமாய் விட்டாராம்.

சாகும்பொழுது, அவர் மீனலோசனிக்குச் செய்த கொடுமைகள், சிவராமனின் கடிதங்களை மறைத்தது முதல் யாவும் சொல்லி வருந்தினாராம். லோசனியின் மன்னிப்பைக் கோரினதுடன், அவள் தன் காதலன் சிவராமனை மறுமணம் செய்து கொள்ளவும் அனுமதித்தாராம்.'' என்றான் பத்மநாபன்.

அவர் தன்னால் வெறுக்கப்பட்டவராயிருந்தும், சென்ற நான்கு வருடங்களாக அவரால் துன்பம் அனுபவித்தவளாயிருந்தும், கடைசிக் காலத்தில் அவர் தன்னுடைய தவறை ஒப்புக்கொண்டு, புத்திசாலித்தனமாக நடந்து கொண்டிருப்பதை நினைக்கும் போது, மீனலோசனியின் மனம் தானாக இளகியது. கண்களில் நீர் சுரந்தது. "நான்கு வருடங்களுக்கப்பால்........ பாவம்! அவர் நல்லவர்.'' என்ற சொற்கள், இரக்கத்தோடு அவள் வாயினின்றும் வெளிப்பட்டன.

# மந்திரக்காரி.

காளியூர் என்பது சேலம் ஜில்லாவிலுள்ள ஒரு சிறிய கிராமம். அவ்வூருக்குப் பெரிய தனக்காரரர் தோழர், ராமலிங்க ரெட்டியார். காளியூருக்கு அவரே சர்வாதிகாரி என்றுங்கூடச் சொல்லலாம், அவ்வளவு செல்வாக்கு. ரெட்டியார் நல்லவர்தான். இருந்தாலும்முரட்டு சுவாபம். பிடிவாத குணம். அதற்குக் காரணம் படிப்புக் குறைவு.

"நல்ல மனிதர்களையும் மதப்பித்து பொல்லாதவர்களாக்கிவிடுகிறது" என்பது அனுபவ உண்மை. ஹிட்லருக்கு யூதர்களைக் கண்டால் எப்படியோ, அப்படித் தான் சுயமரியாதைக்காரர்களைக் கண்டால் ரெட்டியாருக்கு. அவர்களை அழிப்பதற்கு என்னென்னவோ ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார் அவர். பாவம்!

இந்த நிலையில், காளியூருக்கு ஒரு மந்திரக்காரி வந்து சேர்ந்தாள். சிறு வயதினள், மிக்க அழகி. அவளைப் பார்க்க ஊரே திரண்டு வந்தது. தன் வீட்டைத் தேடி வந்த அந்த மந்திரக் காரியால், தனக்கு ஒரு பெருமையும், கௌரவமும் கிடைத்து விட்டதென்று ரெட்டியாருக்குச் சந்தோஷம்.

அவளுக்குச் சாப்பாடு முதல், சகல வசதிகளும் தன் வீட்டிலேயே உற்சாகத்தோடு செய்து கொடுத்தார். பழைய கால குருகுலத்தில் ஆரிய வாத்தியாரிடம் பாடங்கேட்கும் திராவிடச் சிறுவனைப்போல், பணிவுடன் நடந்து கொண்டார் அந்தப்பெண்ணிடம்.

*　　　　*　　　　*

மந்திரக்காரியிடம் உண்மையில் ஒரு சக்தி இருந்தது. சோதிடம் மாந்திரிகம், இவைகளை எதிர்ப்பவருங்கூட, நேரில் பார்த்தபின் அவளுக்கு மிகப்பரிந்து பேசுவார்கள். காரணம் அவள் மிக்க அழகியோடுங்கூட, ஆளுக்குத் தகுந்த மாதிரி சாதுரியமாகவும், இனிமையாகவும் பேசுவதில் வல்லமைக்காரி.

நாட்டில் நிலவும் பெண்கள் சுதந்திரக் கிளர்ச்சி முதல், இத்தாலி—அபிஸீனிய போர் வரையிலும், சகல விஷயங்களையும் அவளிடம் கேட்டுக்கொள்ளலாம். பொதுவாக, அவள் ஒரு கதம்பப் பூச்செண்டு போல் விளங்கினாள். அவள் பெயர் வேதநாயகியம்மாள். பேச்செல்லாம் வேதமணம் கமழும்.

வந்து மூன்று நாட்களாயிற்று. தன்னுடைய மாந்திரிக மாயா விநோத சக்திகளைக் காட்ட, சந்தர்ப்பத்தை நோக்கியிருந்த மந்திரக்காரிக்கு, ஒரு நல்ல வேட்டை கிடைத்தது. ராமலிங்க ரெட்டியாரின் தங்கை பார்வதிக்குப் பேய் பிடித்த மாதிரி ஒருவிதப் பைத்தியம் உண்டு. ஏனோ அது இப்பொழுது அதிகரித்து விட்டது. அது "பேயின் சேஷ்டைதான்" என்று எல்லோரும் முடிவு கட்டினர்.

தக்க சமயத்தில் மந்திரக்காரி வந்திருப்பது, ரெட்டியாருக்குச் சந்தோஷம். எல்லாவற்றையும் தீர்ப்பதாக அபயஸ்தமளித்தாள் அம்மையார். அவளிடம் ஒப்புவிக்கப்பட்டாள் பார்வதி.

* * *

பார்வதி ஒரு பாலிய விதவை. சிறு வயது. உடலுறம் பெற்ற சிறந்த அழகி. அவளது 'இன்ப வா

சல்' அடைபட்டு விட்டது. சமூகம் அவளைக்கொல்லாமல் கொன்றது. இன்ப நுகர்வின் ஆர்வம், மீறும் உணர்ச்சி, இவைகளுக்கு எரு விட்டதைப் போன்று சில வாலிபர்களின் காமப்பேச்சும், கடைக்கண் வீச்சும் அவள் மனதைப் பிய்த்துப் பிடுங்கின. கடவுளால் இந்து சமூகத்துக்கு அருளப்பட்ட "விதவைக் கோலம்" அவற்றை வெல்ல முடியவில்லை. மாற்றவும் முடியவில்லை.

அவள் புத்தி பேதலித்தது. என்னென்னவோ பேசினாள்; என்னென்னவோ செய்தாள். தனக்குப் "பேய் பிடித்து விட்டது" என்று சொல்லுவதைக் குறித்து பார்வதி வருந்தவில்லை. ஆனால் தன்னைப் பிடித்துள்ள "பேய்" இன்னது தான், அது இம்மாதிரியெல்லாம் துன்புறுத்தும் என்பது, மற்றவர் நெஞ்சில் உறைக்கவில்லையே என்றுதான் கண்ணீர் வடித்தாள்; பேசினாள். பிதற்றினாள்! நிச்சயம் இது பேய் தான் என்பது, மேலும் உறுதியானதுதான் கண்டபலன்!

* * *

கள்ளரும் உறங்கும் நள்ளிரவு. ரெட்டியார் வீட்டின் தனி அறையிலே கணார், கணார், என்று மணியோசை ஒலித்தது. உடுக்கையும், சிலம்பும் முழங்கின. சாம்பிராணியும், குங்கிலியமும் புகைந்தன. எருக்கம் பூ, அரளிப்பூக்களின் வாசம் நாசியைத் துளைத்தன. திடீரென்று ஓ ஓ!............. என்ற ஒரு சப்தம் ஓங்காரமிட்டது. மாந்திரிகப் பெண்ணின் மந்திர உச்சாடனமும், அதட்டும் குரலும் ஆர்ப்பரித்தன. ஊர்ப்பெண்களின் குசு குசுப்பேச்சுகளும்,

கதம்ப வாதங்களும், அறையிலிருந்து காற்ரேடு கலந்து வந்தன.

வளர்த்துவானேன்; பேய் ஓட்டுவதற்குச் செய்யும், சம்பிரதாயங்களெல்லாம், அங்கு ஆடம்பரமாக நடைபெற்று ஓய்ந்தன. இது நான்காவது நாள். இப்படியாக இன்னும் பதினறு நாட்கள் ஓட்டவேண்டுமாம். தினசரிப் பேயாட்டம் முடிந்தவுடன் பார்வதியும், மந்திரக்காரியும் அந்தத் தனி அறையிலேயே படுத்துக் கொள்வார்கள்.

அந்தப்பேய் ரொம்பக் கெட்டதாம். பார்வதிக்கு ஏதாவது கேடு விளைவித்து விடுமாம், அதற்கு அவள் பாதுகாப்பு!

* * *

பேயோட்ட ஆரம்பித்து பத்து நாட்களாகி விட்டன. பார்வதி வர வர சுகமடைந்து வந்தாள். பேயும் கொஞ்சங் கொஞ்சமாகப் போகத் தொடங்கியது. தெளிவு பிறந்தது. பொது மக்கள் சுயமரியாதைக்காரனைக் கண்டால் பரிகாசம் செய்தனர். மந்திரக்காரிக்கு நல்ல பெயர். காளியூரிலும், சுற்றுப் புறங்களிலும் அவளுக்கு ஏராளமான புகழ். தகுந்த இடங்களிலிருந்து கிராக்கிகள்! சன்மானங்கள்! அழைப்புகள் வந்து குவிந்தன.

“ராமலிங்க ரெட்டியாருக்கு இன்னும் தான் செய்யவேண்டிய பெரிய உபகாரம் உண்டு, அதற்குப் பிறகுதான், மற்றவர்களது விஷயங்கள் கவனிக்கப்படும்” என்று மந்திரக்காரி தன்னை அழைத்தவர்களுக்குத் திருவாய்மலர்ந்தருளினள். ரெட்டியார்

பெருமகிழ்வடைந்தார். அந்த பாக்கியம் எளிதா?

*　　*　　*

பேயோட்டக் குறித்த 20 நாட்களும் சென்றன. பேயும் ஓடிவிட்டது. பார்வதி இப்பொழுது உற்சாகம் நிறைந்த பெண்ணாகத் தோற்றுகிறாள். அவள் அழகு பன்மடங்கு பிரகாசித்தது. உடல் பூரித்தது. மனம் சாந்தியும், சமாதானமும் பெற்றது. அவள் முகத்திலே சந்தோஷம் கலந்த ஒரு இனிய புன்னகை. இன்ப வாழ்க்கையை எண்ணி எண்ணி மகிழும் புது மணப் பெண்போல விளங்கினாள் பார்வதி.

மந்திரக்காரி ரெட்டியாருக்குச்செய்யும், அந்தப் "பெரிய உபகாரம்" ரெட்டியாரின் புடக்கலேயிலே ரகசியமாக ஆரம்பிக்கப்பட்டு 14 நாட்கள் கழிந்தன. இன்னும் ஒரே ஒரு நாள் தான்! அது பூர்த்தியடைந்தால்; ஆகா! ரெட்டியார் எவ்வளவு செல்வந்தராகி விடுவார்! எவ்வளவு பவுன்கள், எத்தனை வைர ஆபரணங்கள், தங்க நகைகள், நாணயங்கள், பிறகு ஏற்படும் பெருமை, செல்வாக்கு அத்தனையும் நினைக்க நினைக்க, ரெட்டியாரின் மனம் பூரிப்பால் வெடித்து விடும் போலாகிவிட்டது.

கடைசி நாள் வந்தது நடுநிசி; வானத்திலே வெண் மேகக்கூட்டங்கள். சந்திரன் அமுத கிரணங்களை அள்ளிப்பொழிந்தான். எங்கும் பால் போன்ற நிலவொளி. மந்திரக்காரியின் உத்தரவுப்படி, ரெட்டியார் வீட்டுப் பெண்கள் அணிந்திருந்த எல்லா ஆபரணங்களையும் கழற்றி அவளிடம் கொடுக்கப்பட்டன. அவைகளை அந்தப் புதையலுக்குப் பக்கத்திலே தற்காலிகமாகப் புதைத்துவைத்து, புதையலை எடுக்

கும்போது சேர்த்து எடுத்துக் கொள்வதாம்! புதையல் காக்கும் தேவதைக்குச் சந்தோஷத்தை உண்டாக்குவது என்பது, அதன் சித்தாந்தமாம்.

சகல பூஜா திரவியங்களும் குவிந்துக்கிடந்தன. பலியிடுவதற்கு ஒரு கறுப்பு ஆடு கட்டப்பட்டிருந்தது. கைகட்டி, வாய் பொத்தி, பயபக்தியுடன் ரெட்டியார் குடும்பம் மந்திரப்பெண்ணை சூழ்ந்து நின்றது. எங்கும் நிசப்தம்.

அப்பொழுது மந்திரக்காரி சொன்னாள் :-

"ரெட்டியாரே! நீங்களெல்லாம் இனி இங்கிருக்கக் கூடாது. இந்தப் புதையலைக் காப்பது மகா துஷ்ட தேவதை! அதை வசப்படுத்த அதனுடன் போராட வேண்டும். அந்தபயங்கரக் காட்சியைப் பார்த்தால், நீங்கள் செத்துப்போவீர்கள், ஜாக்கிரதை! ஞாபகமிருக்கட்டும். காலை ஆறு மணிக்கு மேல், நான் கூப்பிடும் வரையில், இந்தப்பக்கம் யாரும் தலை காட்டவேண்டாம். போங்கள்."

* * *

விடிய, விடிய ரெட்டியார் விழித்திருந்தார். குடும்பத்திற்கே அன்று ஏகாதசி. சரியாக ஆறு மணி ஆயிற்று. புடக்கிளையிலே எந்த சப்தத்தையும் காணோம். ரெட்டியார் புதையலைப் பார்க்கத் துடிப்பாய்த் துடித்தார். மணி ஏழு, எட்டு, ஒன்பது என்று ஓடியது. அவரது ஆவல் கரைபுரண்டு விட்டது. எப்படியோ மனதில் ஒரு சந்தேகமும் தோன்றியது. முகத்திலே ஏமாற்றம் வழிந்தோட, புடக்கிளையை நோக்கி நடந்தார். அங்கிருந்த காட்சியைக் கண்டு

திடுக்கிட்டு அசைவற்று நின்று விட்டார்.

என்ன ஆச்சரியம்! மந்திரக்காரி வேதநாயகி அம்மையார் அவர்களே அங்கில்லை! கழுத்தறுபட்ட ஆடும், பூசைத் திரவியங்களும், சிதறிக் கிடந்தன. எல்லாம் ஒரே பாழாகத்தோன்றியது. புதையல் குழிக்கருகே சென்றார். அந்தக்குழி தோண்டப்பட்டது. அங்கு புதைத்த வீட்டு நகைகள் அடியோடு காணப்படவில்லை! ஆனால் மூன்றடி ஆழத்தின் கீழே, ஒரு செம்புத்தவலை கிடைத்தது. மீண்டும் மனதில் தோன்றிய ஆசையோடு ரெட்டியார் அதன் மூடியைத்திறந்தார். அவர் பார்த்தவைகள் என்ன? பவுன் குவியல்களா? தங்க நகைகளா? நாணயங்களா? வைர ஆபரணங்களா? இல்லை; ஒழுங்காகத் தன் விலாசமிடப்பட்ட ஒரு கடிதம்.

ரெட்டியாரின் நெஞ்சின்மேல், ஒரு பெரிய பாறுங்கல் விழுந்த மாதிரி இருந்தது. அவரது மனக்கோட்டை "தபதப" வென்று சரிந்து விழுந்தது. ஒன்றும் தோன்றாமல், அப்படியே சோகத்தோடு சாய்ந்து விட்டார் தரையில்.

* * *

ரூபா 9,000, பெறக்கூடிய நகைகள்! மூட நம்பிக்கையின் காணிக்கை. ரெட்டியாரின் குடும்பம் இரண்டு நாளாகப் பட்டினி! இத்துடன் விட்டதா?

"பார்வதியைக்காணோம்!" என்ற செய்தி, ரெட்டியாரின் வைதிகப்பச்சை ரெத்தத்தையே துடிக்கச் செய்து விட்டது. நன்றிகெட்டக் கடவுள்கள்! பக்

தர்களுக்கு இவ்வளவு பயங்கரச் சோதனையா? நாஸ்திகம் வலுத்துவிடும் என்ற யோசனை கொஞ்சங்கூட இல்லையே! எதிர்காலத்தில் இந்தக் கடவுளெல்லாம் எப்படித்தான் பிழைக்குமோ தெரியவில்லை.

அந்தக் கடிதம். ஆம்! அது பார்வதியின் எழுத்துப் போன்றிருந்ததே! மறந்தே விட்டேன், என்று சொல்லிக் கொண்டே, கடிதத்தை எடுத்து வந்து பிரித்தார் ரெட்டியார். மனதுக்குள்ளே படித்தார்.

"அண்ணா! தங்கள் பார்வதி வணக்கம்!

மன்னிக்கவும். தாங்கள் ஏமாந்துவிட்டீர்கள். பாவம், மந்திரக்காரி இன்னுங்கூட ஒரு பெண்ணென்றுதான் நம்பியிருப்பீர்கள். திடுக்கிடாதீர்கள். அவள் ஒரு அழகிய வாலிபன்; மேற்குலத்தான். வேஷதாரி, கொள்ளைக்காரன். மத பக்தர்களை, மாந்திரிகப் பிரியர்களை மட்டந்தட்டும் மதிவல்லபன்.

அவரை, என்னைப்பிடித்த பேயையோட்டுவதற்கு நியமித்தீர்கள். கட்டளையை நிறைவேற்றினர்! வைதவ்யப் பேயை ஓட்டி என்னையும் ஆட்கொண்டு விட்டார். 20 நாட்களாகத் தனி அறையில் என் அன்பரோடு இன்பத்தின் எல்லை கண்டேன்! புத்துயிர் பெற்றேன்! விதவைக்கு வாழ்க்கையில்லை. இன்பமில்லை, நல்ல உணவில்லை, உடையில்லை, அதுதான் தலைவிதி, பிரம்மன் கட்டளை, என்றகருணை யற்ற நமது இந்து மதக்கோட்பாடுகளைவிட, கொடியவன், வஞ்சகன், பொய்க்காரனகிய எனது காதலன் எவ்வளவோ சிறந்தவன்! நல்லவன்!

எங்கள் இருவர் மனதும், உடலும், ஒன்றுபட்டு விட்டன. கல்யாணம் என்ற கூத்து எங்களுக்குத் தேவையில்லை. அவருக்கு நான் இசைந்தேன், எனக்கு அவர் இசைந்துவிட்டார். அவருக்கு கௌரவமாகவும் சம்பாதிக்க வழி தெரியும். இனி

அவர் மந்திரக்காரி வேதநாயகியல்ல. மேன்மை பொருந்திய எனது காதலர். நல்ல தையல்காரர்!

உங்களை ஏமாற்றுவது தான் கடைசி முறையென்று சொல்லிவிட்டார். வருந்த வேண்டாம், என்னை முண்டையாக்கி, நீங்கள் சுகமனுபவித்ததற்குப் பரிகாரமாக, நமது குடும்ப நகைகளை இனி நானே போட்டுக்கொள்வேன்.

மாந்திரிகத்தின் அடிப்படை, அதன் உண்மை சொரூபம் ஏமாற்றந்தான் என்பது சிலரது வாதம். அது பொய். மாந்திரிகர்களுக்கும், சோதிடர்களுக்கும், எப்பொழுதுமே லாபம்உண்டு. அனுபவத்தில் நீங்களும் கண்டு விட்டீர்கள்; எங்களைத் தேட முயற்சிக்க வேண்டாம். அது வீண் சிரமம். கடைசியாக என்னை வாழாமல் வாழ வைத்த உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்."

தங்கள்,

பார்வதி.

ரெட்டியார் திருதிருவென்று விழித்தார். அவர் முகத்திலே அசடு நிறைந்து வழிந்தது. ஆத்திரம், அவமானம், ஏமாற்றம், வெறுப்பு, துக்கம், எல்லாம் அங்கு, குதித்துக் கும்மாளமிட்டன! இவ்வளவுக்குமிடையே, சுயமரியாதைக்காரர் சிலரின் உருவம் கண் முன்பு தோன்றிச் சிரித்தன. மனம் உடைந்தார். அவர்களை அழிக்கும் ஏற்பாடுகள் யாவும் சுக்குச்சுக்காக உடைந்து சிதறி மண்ணோடு மண்ணாயின!

செய்தி, புயல் வேகத்தில் எங்கும் பரவிற்று. தூங்காமல் தூங்கிய காளியூர் மக்கள் கண் விழித்தனர்.

# வேசியின் மகள்.

## 1

அன்று நாடகம் வள்ளித்திருமணம். கொட்டகையில் என்றுமில்லாத கூட்டம்; நல்ல வசூல். தமிழ் நாட்டு நாடக ரசிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்துவிட்ட நடிகன் தங்கப்பாவும், நடிகை கலாவதியும், முதன் முதலாக ஒரே மேடையில் தோன்றும் முதல் நாள்; நெடுநாளாக எதிர்பார்த்திருந்த சந்திப்பு!

டிக்கெட் கிடைக்காமல், ஏமாந்துபோய் துடிப்பவர்கள் பலபேர். சோபா, சேர், பெஞ்சு முதலியவைகளுக்குக் கட்டணம் செலுத்திவிட்டு, தரையில் இடம் கிடைத்தால் போதுமென்று நெருக்குபவர்கள் பலபேர். வாசற்படியில் தொங்குவோர் பலர். ஏங்குவோர் சிலர். நிச்சயமாகச் சொல்லலாம். சேலம் "சென்ட்ரல் ஃகால்" அன்றைய கூட்டத்தைப்போல என்றும் கண்டிருக்காது.

நாடகம ஆரம்பமாயிற்று. கைதட்டல், கூச்சல், கலாட்டாக்களுக்குச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. மூன்றாவது காட்சியின் முடிவுக்குள், தங்கப்பா தன் நடிப்பினாலும், பாட்டு, வசனங்களாலும், அனைவர் மனங்களையும் கவர்ந்து கொண்டு விட்டான். கலாவதியின் பேச்சும், பாட்டும், நடிப்பும், கொஞ்சங் கொஞ்சமாக தங்கப்பாவையும் மீறிப்போய்க்கொண்டிருந்தன. நான்காம் காட்சி ஆரம்பமாயிற்று; அங்கு கூடியிருந்த மக்களின் உள்ளங்களிலும் ஒரு போராட்டம் ஆரம்பமாயிற்று. "தங்கப்பா, கலாவதி, இவர்

களில் சிறந்த நடிகர் யார்?''

சுப்பிரமணியர் வள்ளியின் காதலைப்பெற வன வேடனுகத் தோன்றுகிருர். தங்கப்பா ஒரு புதிய உற்சாகத்துடனே காணப்பட்டான். அவனது நடிப்பு அபாரமாக ஜொலித்தது. ஆனல் ஒரு சங்கடம்; கொச்சையான சிற்றின்பப் பாட்டுகளைப்பாட, அவனது மனம் ஏனே சற்றுத்தயங்கிற்று. அதைப் போன்றே வள்ளியும் "வேடா, மூடா, போடா," என்பன போன்ற வார்த்தைகளை உச்சரிக்கும்போது, மிகுந்த மன வேதனையடைந்தாள். அந்தச் சொற்களின் தொனிப்பும், அவள் வதன உணர்ச்சியும் அதை நன்ருகக் காட்டின.

கலியுகக் கடவுளாகிய தன் வாயினின்றும், கொச்சைப் பதங்களும், பேச்சுகளும் வெளிப்படுவது, தன் கடவுள் தன்மைக்கே இழுக்கென்று சுப்பிரமணியர் நினைத்தாரோ, அல்லது தான் ஒரு அரசகுமாரியாயிருந்தும், கீழ்த்தரமான பதங்களைப் பிரயோகிப்பது சரியல்லவென்று வள்ளி நினைத்தாளோ என்னவோ!

ஆனல் இவர்களது நடிப்பில் உள்ள புதுமைகளைக் கவனித்த வண்ணம், மேடைக்குள் நின்றுகொண்டிருந்த கலாவதியின் தாய்க்கு, மனதில் ஒரு கவலை விழுந்து விட்டதென்னவோ உண்மை. அன்றைய நாடகத்தில் வேறு விசேஷ சம்பவங்களொன்றுமில்லை. வழக்கம்போல் "வள்ளி சுப்பிரமணியர்'' காட்டுக்காதல் வெற்றி பெறுகிறது. நாடகமும் மங்களத்தோடு முடிவுற்றது.

நாடகாபிமானிகள் யாவரும், நல்ல ஜோடி என்று வாழ்த்தினர். "நாடக மேடையின் கோமாளிக்கூத்துக்கு இவர்களால் விமோசனம் ஏற்படலாம்" என்ற நம்பிக்கையுடன் திரும்பிச்சென்றனர் சிலர்.

## 2

மறு நாள், காலை 9 மணியிருக்கும். தங்கப்பா தன் ஜாகையில் ஈசிச்சேரில் சாய்ந்த வண்ணம், பலத்த யோசனையிலிருந்தான். அவனுக்கு எதிரேயிருந்த கட்டிலின்மீது, பல சினிமாப் பத்திரிகைகள் சிதறிக் கிடந்தன. அவன் முகம், மனதில் ஊறிக்கொண்டிருக்கும் கவலையைக்காட்டிற்று.

அந்தச்சமயத்தில் கலாவதியின் வேலையாள் ஒருவன் அங்குத்தோன்றினன். மிகப்பணிவுடன் அவன் சொன்னன்: "ஏதோ காரியார்த்தமாக அம்மா தங்களைப்பார்க்க விரும்புகிறார்கள். கையோடு அழைத்துவரச் சொல்லி என்னை அனுப்பினர்கள்" தங்கப்பாவின் உள்ளத்தில் பளிச்சென்று ஒரு மின்னல்; குதூகலம். ஈசிச்சேரினின்றும் எழுந்தான். அமைதியாகத் தன்னை அலங்கரித்துக்கொண்டான். சிறிது நேரத்தில் அந்த வேலையாளுடன் ஒரு ஜட்காவிலேறிக்கொண்டு, கலாவதி தங்கியிருக்கும் வீடு நோக்கிச் சென்றான். வழிநெடுகப் பல இன்பக்கனவுகள்!

கலாவதி மிகுந்த அன்போடு அவனை வரவேற்று உபசரித்தாள். அவளது உள்ளங்கனிந்த பேச்சும், நோக்கும், செய்கையும் தங்கப்பாவை அப்படியே ஒரு இன்பலோகத்தில் கொண்டுவிட்டன. அவன்

எதிர்பார்த்ததற்குப் பன்மடங்கு அதிகமாக அங்கு உபசரிக்கப்பட்டான். சற்று நேரம் அவன் என்ன பேசுவதென்றுகூடத் தெரியாமல் தத்தளித்துப் போய்விட்டான்.

கலாவதி, அவனெதிரில் வந்து நின்று கொண்டு கேட்டாள்: "இன்று தங்கள் மத்தியானச் சாப் பாடு இங்குதான். எல்லாம் தயாராய்விட்டன. சாப் பிடுவதில் தங்களுக்கு ஆட்சேபணையில்லையே?"

அவன் சற்று வைதிகன், ஆச்சாரப் பித்தன். எனவே கொஞ்சம் தயங்கினன். மனதிற்குள் சிறு குழப்பம். எனினும் அதையெல்லாம் சுட்டெரித் துக்கொண்டு முன்னல் வந்து நின்றது, அவளிடம் கொண்டுள்ள பிரேமை. கண்ணியமுள்ள காதலுக் குமுன்னல் சாதியின் மதிப்பு எத்தனைக் காசு!

நாவினிக்க, கண்குளிர, உள்ளம் நெகிழ, உணர் ச்சி பெருக, இன்பமாகக் கழிந்தது நேரம்.

## 3

கலாவதியும், அவள் தாய் லட்சுமியம்மாளும் பட் டகசாலையில் வீற்றிருந்தனர். அப்போது லட்சுமி யம்மாள், சற்று கடுகடுப்புடன் கேட்டாள்: "என் சொல்லைக் கேட்கமாட்டாயா கலாவதி?"

"அம்மா! நீயேன் வீணுகக்கோபித்துக்கொள் கிருய்? நான் மகிழ்ச்சியோடு வாழ்ந்தால் உனக்குப் பெருமையில்லையா? என்னை என் மனம் போல் விட்டுவிடு, நான் எவ்வித கெட்ட காரியங்களையும் மேற்கொள்ளவில்லை. ஒழுக்கத்தை உயிரினும் மே

லாக மதிக்கின்றேன். நிச்சயமாக அவரைத் தவிர இனி வேறு நடிகருடன் நடிக்க, என் மனம் ஒருக்காலும் சம்மதிக்காது."

"கலாவதி! இதுவென்ன பிடிவாதம்? ........... ஆம்! நான் கொடுத்த செல்லந்தான் இத்தனைக்கும் காரணம். ஆதியிலே நம்ம சாதித்தொழிலை வெறுத்து, பெரிய வேதாந்தம் பேசினாய். என்னமோ படித்த பிள்ளையாச்சே என்று இஷ்டம்போல விட்டு வைத்தேன். இப்பொழுது தலைக்குமேலேறி விட்டாய். எனக்கு நேற்று நாடகத்தின் போதே தெரியுமே, இப்படியெல்லாம் வருமென்று. என் பிரியத்துக்கு மாறாக அவனையழைத்து விருந்து வைத்தாய், கொஞ்சிக்குலாவினாய்; இப்போது அவனைத் தவிர வேறு யாருடனும் நடிக்கப் பேவதில்லை என்கிறாய். நாளைக்கு அவனையே கலியாணம் செய்து கொண்டு வாழப் போகிறேன். நாடகத் தொழிலே தேவையில்லை யென்று ஏன் சொல்லமாட்டாய்? எல்லாம் என் கிரகசாரம், தலையெழுத்து, உன்னைச்சொல்லி என்ன செய்வது!"

"அம்மா! உனக்குக் கொஞ்சங்கூட ஈவு இரக்கமில்லையே! நான் வேசித் தொழில் செய்து புழுத்துக் கிடப்பதுதான் உனக்குச் சம்மதமா? ஒரு தாய் தன் மகளிடம் வைத்துள்ள அன்பின் அடையாளமா இது? நான் பரிசுத்தம் குலையாமலிருப்பது உனக்கே பொறுக்கவில்லையே. இதுவும் என் துரதிர்ஷ்டம் தான். ஆம்! இன்னும் ஒளிவு மறைவென்ன; உண்மைதான். அவரை நான் காதலிக்கிறேன். அவர் சம்மதித்தால், கல்யாணம் செய்து கொள்ள

வும் விரும்புகிறேன். இதில் தவறென்ன இருக்கிறது ? ஆனால் ஒன்று ; நீ நினைப்பதுபோல நாடகத் தொழிலை விட்டுவிட மாட்டேன். நாங்களிருவரும் சேர்ந்து நாடகக்கலையை வளர்ப்போம். அதுவே எங்கள் ஜீவித லட்சியமாக இருக்கும். நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டியதில்லை.''

லட்சுமியம்மாளுக்குக் கோபம், ஆத்திரம் எல்லாம் பொங்கிக் கொண்டு வந்தன. ஆனால் பேச நாவெழவில்லை. மகளின் கண்டிப்புக் குணம், அவளுக்குத் தெரியும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமல்லவா? பேசாமல் எழுந்து, சமையல் அறைக்குள் சென்று விட்டாள்.

## 4

மாலை 6 மணியிருக்கும். அருணன் அடிவானத்தினின்றும் செவ்வொளி பரப்பினான். சாளரத்தின் வழியாக உள்நுழைந்த இளங்கதிர்கள், கலாவதியின் சௌந்தரியவதனத்தை அழகு படுத்தின. அவளது நாகரிக உடையலங்காரம், அவளது இயற்கையழகை மிகைப்படுத்திக் காட்டின.

தங்கப்பா, அவள் முகத்தை நோக்கிய வண்ணம் மெதுவாகச் சொன்னான் : "நாளைய தினம், நான் ஊருக்குப் பயணம்.''

"ஏன் ? எதற்கு ?"

"அப்பாவிடமிருந்து அழைப்பு வந்திருக்கிறது. என்னமோ எனக்குக் கலியாணமாம். பெரிய இடத்

துப் பெண்ணும். எந்த வேலையிருப்பினும், உடனே வந்து சேரவேண்டுமென்று உத்தரவு."

கலாவதியின் உள்ளம், இடியோசை கேட்ட நாகம் போல் கலங்கி விட்டது. நெருப்புக் குழியில் விட்டெறிந்த தாமரை மலர்போன்று அவள் வதனம் வாடியது. மெலிந்த குரலில் கேட்டாள்: "அவசியம் போகத்தான் வேண்டுமா?"

"எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரே கலக்கமாயிருக்கிறது."

"நீங்கள் போவதாயிருந்தாலும், நமது சந்திப்பு மறந்து போகும்படி விட்டுவிட மாட்டீர்களே? உங்களை நம்பலாமல்லவா?"

"கலாவதி! இதை நான் கேட்கவிருந்தேன். நீ முந்திக்கொண்டு விட்டாய். அன்றையதினம், நாடக மேடையிலேயே பகிரங்கத்தில், என் மனதை நீ கவர்ந்துவிட்டாய். நமது சந்திப்பு, அழியாமலிருக்க வேண்டுமென்பதே என் விருப்பம். நமது சந்திப்பால் ஏற்பட்ட இந்த நட்பு, சற்று விரிவடைந்து வேறு விதமாகப் பரிணமித்தாலும் எனக்குப்பரம சந்தோஷமே. அதற்கு உன் அபிப்பிராயமும் அனுகூலமாயிருந்து விட்டால், ஆஃகா! உண்மையில் என்னை விடபாக்கியசாலி வேறு யார் இருக்க முடியும்?"

அந்த வார்த்தைகளின் சூழ்மமான கருத்து, அவளுக்குப் புரிந்துவிட்டது. ஒரு கணம் அப்படியே மெய் மறந்துவிட்டாள். பொங்கித் ததும்பும் எல்லையற்ற ஆனந்தத்துடன் எழுந்து, அவன் கரங்களைப்

பற்றிக்கொண்டு கேட்டாள்: "அன்பரே! உண்மை தானா? வலுவந்தமாகக்கிடைக்கும் ஒரு பெரிய இடத்துப் பெண்ணைவிடவா, இந்த நாடகக்காரியை மேலாக மதிக்கிறீர்கள்? நம்பமுடியவில்லையே. ஒருகால் நான் வேசியின் மகளென்பதை மறந்து போய் விட்டீர்களா! பின்னால் இதைக் குறித்து வருந்தமாட்டீர்களென்பதை. நான் எப்படி நம்புவேன்?"

"நான் வருந்துவதா? பெருமையல்லவோ கொள்ளுவேன். விபசாரியின் மகள் விபசாரித்தனம் செய்யத்தான் வேண்டும் என்று சொல்லுபவன், உண்மையில் மனிதனாக இருக்க முடியாது. உன் பரிசுத்தத் தன்மை நானறிவேன். சிப்பியின் வயிற்றிலே முத்து பிறக்கவில்லையா? பழமைப் பித்தன் மகன் புதுமைப் பித்தனாக மாறுவதில்லையா? கலாவதி! மனத்தூய்மை கொண்ட மாணிக்கம் நீ! உன்னை ஏற்றுக்கொள்வதனால், உண்மையில் நான் கௌரவமடைகிறேன்." என்று கூறிய வண்ணம், அவள் கரத்தைப்பற்றி முத்தமிட்டான் தங்கப்பா.

அடுத்த விநாடியில், வெள்ளத்தோடு வெள்ளம் கலந்து பெருகி, காதல் ஓடையின் கரை புரண்டது!

## 5

திண்டுக்கல்லில், தங்கப்பாவின் தந்தை கச்சாபகேச முதலியார், மிக்க செல்வந்தராயிருந்தவர். பிரபல இரும்புப்பெட்டி வியாபாரி. நல்ல குணவந்தர். ஆனால் சற்று பிடிவாதக்காரர். பழமையில் பலத்த பற்றுதல். வைதிகத்தில் வரட்டு மோகம், கடவுளிடத்தில் கடுங்காதல். இவைகளின் நிமித்தம் அவர்

செலவிட்ட பணம் எதேஷ்டம்.

திடீரென்று அவர் வியாபாரம் முறிந்தது. காலையிலே குபேரனுயிருந்தவர், மாலையிலே குசேலராய் விட்டார். கடன்காரர்கள் வந்து சூழ்ந்து கொண்டனர். அடுத்த நாள் அவருக்கும், அவர் சொத்துக்களுக்குமுள்ள பாத்தியதை பறிபோயிற்று. கடவுளை நம்பினவர் கைவிடப்பட்டார்!

தங்கப்பா, அவருக்கு ஏக புதல்வன், செல்வத்திலே வளர்க்கப்பட்டவன். அப்பொழுது அவனுக்கு வயது 17, நல்ல நடத்தையுள்ளவன். வியாபார வெட்டிகளொன்றும் தெரியாது. சங்கீதமென்றால் அவனுக்கு உயிர். ஒரு பஜனை விடமாட்டான். மிக நன்றாகப்பாடுவான். நாடகமென்றால் மிகுந்த பிரியத்தோடு செல்லுவான். திண்டுக்கல்லில் அவன் பார்க்காத நாடகம், நடைபெற்றது கிடையாதென்றே சொல்லிவிடலாம்.

தந்தையும், தாயும் வறியராகி வடிக்கும் கண்ணீர், அவன் மனத்தை உருக்குலைத்தது. செல்வந்தராயிருந்தபோது, அவர்களை அண்டினவர்கள் எட்டிப்பார்க்கவில்லை. பிறர் தயவால் வாழவும் அவர்களுக்கு மனமில்லை. எனவே தங்கப்பாவுக்கு ஏதாவது ஒரு தொழிலை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்பொழுது அவன் முன்னால் நின்றது நாடக மேடை. அதுமுதல் அவன் நடிகன்!

அவன் அரும்பாடுபட்டான். நாடகத் துறையில் இறங்கி நான்கு ஆண்டுகளில், தமிழ் நாடெங்கும் கீர்த்திபெற்றுவிட்டான். அவனது நல்ல தோற்றம்,

செழிப்பான உடலமைப்பு, அழகிய வதனம், கம்பீர நடை முதலியன, அவனைப் பிரதான நடிகனுக்கு அருகனுக்கின. அவன் வெண்கலக் குரலில் இசைக்கும் இனிய கானங்கள், பல்லாயிரக்கணக்கான மக்களின் இருதயங்களை மகிழ்வித்தன. நாளடைவில் நடிப்பிலும் நல்ல திறம்பெற்றுவிட்டான். தங்கப்பாவை "தமிழ்நாட்டுத் தவநடிகன்" என்று நாடக முதலாளிகள் விளம்பரப்படுத்துவதில், அதிக குற்றம் காணமுடியாது.

தங்கப்பா சம்பாதனைக்கு வந்துவிட்டான். பெற்றோர்களின் குறை ஒருவாறு நீங்கிற்று. மகனின் புகழ், அவர்களுக்கு மகிழ்வளித்தது. பிள்ளைப் பேற்றின் பயனை அனுபவித்தனர்.

இந்த நிலையில் ஒரு கனவான், பெருஞ்செல்வவந்தர், தன் பெண்ணைத் தங்கப்பாவுக்கு மணம் முடிக்க முன் வந்தார். கச்சாபகேச முதலியார் பரமானந்த மடைந்தார். நாடகத்திற்காகச் சேலம் போயிருந்த தக்கப்பாவுக்குத் தகவல் அனுப்பினர். அவன் வரவுக்காக ஆவலுடன் காத்திருந்தார்.

## 6

தங்கப்பா திண்டுக்கல் வந்து சேர்ந்தான். தகப்பனர் வருத்தப்படுவாரே என்று அவன் தயங்கிக் கொண்டிருக்கவில்லை. "திடு"க்கென்று கலியாண விஷயமாகத்தன் மனதில் உள்ளதை அப்பட்டமாகச் சொல்லி விட்டான். பெரியவர் வெலவெலத்துப் போய் விட்டார். அவர் ஆசையை அவலப்படுத்தியது தங்கப்பாவின் எண்ணம். "குலம் கோத்திரமில்லாத

ஒரு வேசியின் மகளைத் தன் மகன் மணந்துக்கொள்ள வேண்டுமென்கிறானே!'' அவரது வைதிக உள்ளம் வெந்து நீராயிற்று. எனவே, அவர் மிகுந்த துக்கத்துடனும், கனிவுடனும் சொன்னார்:

"வேண்டாமப்பா! இது நம்ம சாதிக்கு அடுக்காத காரியம். நமது மூதாதையர் காலந்தொட்டு, நம்ம குலம், மிகப்பெருமை வாய்ந்தது. அந்தப்பெருமையைக்குலைத்த பாவம் நமக்கு வேண்டாம். என் சொல்லைக்கேள். இல்லை, அப்படித்தான் செய்துகொள்ளுவேனென்று சொல்வதானால், இந்தக்கிழடுகளை முதலில் ஒழித்துவிட்டு, அப்புறம் உன் பிரியம் போலச் செய்துகொள்."

இத்துடன் அவன் தாயார் ஒரு பக்கம் பழம் பெருமையை நினைத்துப் பொருமி, கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தார்.

தங்கப்பாவின் மனதிற்குள் பெரிய சங்கடம், துன்பம். தகப்பனாரின் பரிதாபகரமான வார்த்தைகளும், தாயாரின் கண்ணீரும், அவன் இருதயத்தைச் சின்னபின்னப்படுத்தி விட்டன. எனவே தழதழத்த குரலில் அவன் சொன்னான்:

"நான் கலியாணமே செய்துகொள்ள வில்லை. பிரம்மச்சாரியாக இருந்து விடுகிறேன்," என்று. திகைத்தனர் பெற்றோர்கள்! சேலம் திரும்பினான் தங்கப்பா.

7

"கல்கத்தா நேஷனல் மூவிட்டோனில் சமூக

சீர்திருத்தக் கதை "வேசியின் மகள்" தமிழ்ப்பேசும் படமாக தயாரிக்கப்பட்டு வருகிறது. பிரதான நடிகர்கள் தங்கப்பாவும், கலாவதியும், தங்களையே கதா பாத்திரங்களாக பாவித்துக்கொண்டு, முழுத் திறமையுடன், தத்ரூபமாக நடிக்கின்றனர். படம் முக்கால் பாகத்திற்கு மேல் முடிந்து விட்டது. நிச்சயம், இது ஒரு முதல்தர சமூகப்படமாக விளங்கும்." என்று சினிமாப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிப்பட்டன.

நாடகத்தில் அவர்கள் நடிப்பைக்கண்டு மகிழ்ந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள், "வேசியின் மக"ளை ஆவலோடு எதிர்பார்த்தனர்.

* * *

மாதங்கள் ஆறு உருண்டு சென்றன.

திண்டுக்கல்லில் தங்கப்பாவின் பெற்றோர்கள் துன்பத்தில் மூழ்கியிருந்தனர். அவன் சினிமாவில் நடிப்பது, கலாவதியுடன்தான் என்பது தெரிந்தது. அவர்கள் துன்பம் மேலும் அதிகரித்தது. தங்கள் வருத்தம் தெரிவித்து, அவனுக்குப் பல கடிதங்கள் எழுதினர். எப்படியும் அவன் கலாவதியை மணந்துகொள்ளும்படி விடலாகாது என்பதுதான் அவர்கள் கவலை.

## 8

கல்கத்தாவிலே, அவர்கள் ஒரே இடத்தில் தான் ஜாகை எடுத்துக் கொண்டிருந்தனர். ஸ்டுடியோவுக்குச் சென்ற நேரம் போக, மற்ற நேரங்களில் இரு

வரும் உல்லாசமாகப் பொழுது போக்கினர். ஆயி னும், தங்கப்பாவை வருத்திக்கொண்டிருக்கும் கவலை அடிக்கடி அவன் முகத்திலே தோன்றிவிடும். கலா வதியிடம் மறைக்க முயல்வான். முடிவதில்லை. கலா வதி, அவன் மனதை நன்றாக அறிந்து கொண்டுவிட் டாள். ஒரு பக்கம் பெற்றோரின் பாசமும், மறு பக்கம் தன் காதலும் ஏக சமயத்தில் தோன்றி, அவனை வருத்துகின்றன என்பதை உணர்ந்தாள். எனவே கூடுமான வகையில் தேறுதல் அளித்து அவனை மகிழ்விக்க முயன்றாள். தங்கப்பாவின் சந்தோஷ மே தனது பேரின்பம் எனக்கொண்டாள் கலாவதி.

லட்சுமியம்மாள் இப்போது அடியோடு மாறிப் போய்விட்டாள். மகளுடைய பிரியத்திற்கு மாறாக நடப்பதில்லை. தங்கப்பாவின் கவுரவமான நடவடிக் கைகளையும், கலாவதி அவனிடத்து கொண்டுள்ள மட்டற்ற காதலையும், இருவருக்கும் நடிப்பில் உள்ள ஒற்றுமையையும் கண்டு, ஸ்டுடியோ டைரெக்டரும், முதலாளிகளும், மகிழ்ச்சியடைவதையும், காணக் காண அவள் மனம் பூரித்துவிட்டது. மேலும், தன் மகள் சினிமாவில் நடிக்க நேர்ந்தது தங்கப்பாவின் தயவினால்தானே, என்பதை நினைத்த போது, அவள் தங்கப்பாவை, தெய்வமாகத் மதித்தாள். கொண் டாடினாள்.

"வேசியின் மகள்" திரையில் குதிக்கத்தயாராகி விட்டாள். முதன் முதலில் சென்னை தியேட்டர்களை அவளுடைய முதலாளிகள் நாடவில்லை. பலதிறப் பட்ட பத்திரிகைகளின் சாதக பாதக அபிப்பிரா யங்களுக்குப் பயந்தனரோ, என்னவோ!

# ௭

"வேசியின் மகள்" திக்கு விஜயம் தொடங்கினாள். சேலத்திலே, தங்கப்பாவும், கலாவதியும், சுப்பிரமணியரும் வள்ளியுமாக முதலில் சந்தித்த, அதே "சென்ட்ரல் ஃகாலில்," அவர்கள் படத்தின் ஆரம்ப விழாவும் நடைபெற்றது. ஒரு பிரபல சமூக சீர்திருத்தத் தொண்டர் தலைமை வகித்தார். பிரதான நடிகர் தங்கப்பாவும், கலாவதியும் மேடையில் தோன்றினர். பல பரிசுகள் வழங்கப்பட்டன.

நடிகர்கள் பலரும், தங்கப்பாவின் பெற்றோரும் கூட விஜயம் செய்திருந்தனர். தாங்க முடியாத கூட்டம். தங்கப்பாவின் அருகில் கச்சாபகேச முதலியார் ஒரு தனிப்பெருமையுடன் வீற்றிருந்தார் திரையை நோக்கிய வண்ணம். கலாவதி தன் தாயுடன் பெண்கள் பகுதியில் வீற்றிருந்தாள். "வேசியின் மகள்" காலப்போக்கிற்கேற்ற ஒரு சுவாரசியமான கதை. தங்கப்பாவின் இனிய கீதகோஷத்துடன் படம் ஆரம்பமாயிற்று.

"சுந்தர் ஒரு படித்த வாலிபன். கமலா ஒரு வேசியின் மகள். இருவருக்கும் காதல் ஏற்படுகிறது. கமலாவின் தாய் பார்வதியம்மாள், அவளை வேசித் தொழில் செய்யும்படி வற்புறுத்துகிறாள். கமலா சம்மதிக்கவில்லை. ஜமீன்தார் முருகேசனிடம் ரூ. 5,000 பெற்றுக்கொண்டு, கமலாவை சூழ்ச்சி செய்து அவனிடம் அனுப்பிவிடுகிறாள் பார்வதியம்மாள். சுந்தருக்குத் தகவல் எட்டிவிடுகிறது. உடன் தன் இரு தோழர்களுடன், ஜமீன்தாருடைய மாளிகைக்குச்

செல்லுகிறான். கமலா, ஜமீன்தார் முருகேசனால் பலாத்காரம் செய்யப்படுகையில், காப்பாற்றப்படுகிறாள். பிறகு ஜமீன்தாருக்கும், சுந்தருக்கும் போராட்டம்! சுந்தரின் தகப்பனார் ஜமீன்தாரிடம் பட்டிருந்த கடனுக்கு, அவர்கள் வீடு ஜப்தி செய்யப்படுகிறது. சுந்தர் வேசிப்பெண்ணை மணக்கப் போகிறான் என்பதற்காக, அந்தக் குடும்பம் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்படுகிறது. பின்னர் ஜமீன்தாரின் சூழ்ச்சியால், சுந்தர் ஒரு கொலைக் குற்றத்திற்கு ஆளாக்கப்படுகிறான். விசாரணையில் சுந்தரே குற்றவாளியாகிறான். மரண தண்டனை விதிக்கப்படுகிறது. அவன் பெற்றோர்கள் கதறுகின்றனர். சிறையில் கமலா சுந்தரைச் சந்திக்கிறாள். தங்கள் நிலைமை, சமுதாய நிலைமை குறித்துத் துக்கப்படுகின்றனர். ஜமீன்தார் மறைவிலிருந்து பார்த்து மகிழ்கிறான். தண்டனை நிறைவேற்றும் நாள். சுந்தர் தூக்கு மேடைமேல் ஏற்றப்படுகிறான். இன்னும் சற்று நேரம்; அவன் பிணமாகிவிடுவான். ஆனால் அதே சமயத்தில், அவனது தோழன் குமாரசாமி அங்குத் தோன்றி, அரசாங்க உத்தரவைக் காண்பிக்கிறான். சுந்தர் விடுதலை செய்யப்படுகிறான். குமாரசாமியின் துப்பறியும் சமர்த்தால், ஜமீன்தார் முருகேசனே உண்மைக் குற்றவாளியாகிறான். தண்டிக்கப்படுகிறான். சுந்தரும், கமலாவும் காதல் மணம் செய்துகொண்டு வாழ விரும்புகின்றனர். வைதிகப் பெற்றோர்கள் குறுக்கிடுகின்றனர். அந்தக் கட்டத்தில் சுந்தர் மனங்கசிந்துக் கூறுகிறான்:

"அப்பா! காதலுக்காக நான் பட்ட கஷ்டம் தங்களுக்குத்தெரியும். என் கருத்தும், கலைவாழ்வும்

தெரியும். மனமுவந்து எங்களை வாழவையுங்கள். உலகத்திலே ஆண் பெண் என்ற இரண்டு சாதிகள் தான் உண்டு. நந்தனைத் தாழ்ந்தவனாக மதித்திருந்தால், ஆண்டவன் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார். குறத்தியென்று மதித்திருந்தால் வள்ளியை முருகன் மணந்திருக்கமாட்டார். வேசியின் வயிற்றிலே கற்பரசிகள் தோன்றுவதைச் சாத்திரங்கள் அனுமதிக்கவில்லையா? நீங்கள் பரம வைதிகர். உண்மையான வைதிகத்தில் பற்றிருந்தால், பகவானிடம் பக்தியிருந்தால், ஏற்றத் தாழ்வை நீக்கி வையுங்கள், கடமையைச் செய்யுங்கள், கருணை காட்டுங்கள்.

தினந்தோறும் புதுப்புது அக்கிரமங்களை—அநீதிகளைச்—செய்து கொண்டிருந்தாலும், குலமகள் மேலானவள் என்றும், பரிசுத்த மனத்துடன்—பகுத்தறிவுடன்—தூய வாழ்வை மேற்கொண்டிருந்தாலும், வேசி மகள் கீழானவள் என்கிற நியாயங்களை, அப்பா! அறிவுள்ள உலகம் ஏற்குமா? மனச்சாட்சிதான் ஒப்புமா? யோசித்துப் பாருங்கள். கமலா குற்றமற்றவள், நானும் குற்றமற்றவன். எங்கள் காதல் உண்மையானது; வலிமை பொருந்தியது. எங்களால் யாருக்கேனும் அபகீர்த்தி ஏற்படுமானால், நாங்கள் உலகிலிருந்தே மறையவும் சித்தமா யிருக்கிறோம். ஆனால் காதலை மட்டும் பிரியோம். வாழ்வில் ஒன்று பட முடியாவிடில், சாவிலாவது ஒன்று பட்டே தீருவோம்.

அந்தோ! மனித சமூகாயத்தின் நியாய உணர்ச்சி அற்றுப்போய்விட்டதா? நேர்மை நீராய்விட்டதா? பகுத்தறிவு பாழ்பட்டுப் போயிற்ற? என்ன

ரும் தமிழ்நாடே! நீ என்றைக்கு விழித்தெழுவாய்? என்றைக்கு உண்மையறிவாய்? என் போன்ற இளைஞர்களை என்றுதான் வாழவைப்பாயோ?........''

சுந்தரின் உருக்கமான பேச்சும், நடிப்பும், கச்சாபகேச முதலியாரின் உள்ளத்தைக் கலக்கி விட்டன. தங்கப்பாவே தன் முன்னால் மண்டியிட்டு, மணம் வேண்டித் தன்னைக்கெஞ்சுவதாக நினைத்தார். அவர் உடம்பு சிலிர்த்து விட்டது. மனம் பாகாய் இளகிற்று. கண்கள் நீரைச் சொரிந்தன. என்ன நினைத்தாரோ; அருகில் வீற்றிருந்த தங்கப்பா வின் கரங்களைப் பற்றினார். நாவு குழறக் குழறச் சொன்னார்:—

"சங்கம்! நான் செய்தது குற்றம். மன்னித்து விடு. கலாவதியை நீ மணந்துகொள்."

திரையில், சுந்தருக்கும் கமலாவுக்கும், இனிது நிறைவேறியது காதல் மணம்!



# ...ட்டுக் கேற்ற நல்ல நூல்...

## ...றள் இசைப் பாடல்கள்.

அறத்துப்பால் — பாவலர். வேலாயுதசாமி.

இசையரங்குகளில் குறள் நெறி பரப்பும் இன்...
தமிழ்ப் பாடல்கள். ஒவ்வொரு பாட்டிலும் ஒரு...
குறள்! பத்திரிகைகளால், பாவாணர்களால் ...
டப்பெற்றது.

★

**மின்னொளி** — ப. கண்ணன்.

கிராமிய வாழ்க்கை நிலையைச் சித்திரிக்கும் சீர்...
நாடகம். கருத்தமைந்த பேச்சுக்களால் பழமை...
தகர்த்து, புதுமைக்கு வழிவகுப்பது.

★

**ஒரே முத்தம்** — மு. கருணாநிதி.

சுவையுள்ள நிகழ்ச்சிகள், சூறாவளிப் பே...
நிறைந்த சரித்திரக் கற்பனை நாடகம். நடிப்புக் ...
ளுக்குந் தேவும், படிக்கும் ரசிகர்களுக்கும் ...
ம்பாகும். (அச்சில் 2-ம் பதிப்பு)

★

**கெட்டிக்காரன்** — ப. க. குஞ்சிதம்.

பள்ளி மாணவர்கள், சிறுவர், சிறுமியர்க்கு...
அறிவூட்டும் பாங்கான மூன்று சிறு கதைகள்.

★

**சிந்தனைச் சுடர்** — சி. பி. சிற்றரசு

சிந்தனையின் தன்மை, மூக்கியம், விளைவு,
பயன் ஆகியவற்றைக்கனல் தெறிக்கும் நடை...
லாற்றுத் திரையில் வடித்துக்காட்டும் ஆராய்ச்...

★

இவை யாவும்

## தித்திக்கும் தென்றல் வெளியீ...


செந்தமிழ் அச்சுக்கூடம், சலகண்டபுர...